# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

மார்ச் - ஏப்ரல் 2022
ஆண்டு 2 ▲ இதழ் 05



எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்.

# ஆசிரியர் பக்கம்

அன்பின் வாசகர்களுக்கு வணக்கம்!

மகளிர் என்றாலே சமைப்பதற்கும் வீட்டுவேலை செய்வதற்கும், குடும்பம் நடத்தவும் என்ற காலம் கடந்துபோய், தற்போது அனைத்து துறைகளிலும் அவர்கள் தனித்துவத்துடன் மிளிர்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இப்போது வீட்டிலிருந்து கொண்டே இணையத்தின் மூலம் உழைக்கும் பல்லாயிரக் கணக்கான பெண்களைக் காணலாம். வீட்டு வேலைகளை செய்து முடித்து வீண் அரட்டைகளில் ஈடுபடாமல், நேர முகாமைத்துவத்தை ஒழுங்கான முறையில் கடைப்பிடித்து, எம் நேரத்தை பயனுள்ளதாக செலவு செய்வதே அறிவுபூர்வமானதாகும். அதற்கு எத்தனையோ வழிகள் உள்ளன. ஓய்வுநேரங்களில் வீட்டுத் தோட்டம் செய்யலாம். கைவினைப் பொருட்கள் ஏதும் செய்யலாம். பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கலாம். தையல் பழகலாம். இணையத்தில் வருமானம் வரக்கூடியதாக ஏதும் பகுதி நேரத் தொழிலைத் தேடிக் கொள்ளலாம். இவை மேலதிக வருமானத்தைத் தருவதோடு மனதுக்கும் மகிழ்ச்சி தருவதாக அமையும்.

பெண் என்பவள் ஆக்கபூர்வமாக சிந்திக்கவும் செயலாற்றவும் கூடிய வல்லமை கொண்டவள். ஆகவே நம் சுயமிழக்காமல் சோதனைகளை வென்று சாதனை படைப்போம். அனைத்து பெண்களுக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகள்!

ஆசிரியர்

– சித்தி வ.ஃபீரா


# முத்தமிழ் கலசம்



இருமாதத்திற்கொருமுறை

மார்ச் – ஏப்ரல் 2022

ஆண்டு 2 ▲ இதழ் 05



**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine



படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.



படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email : muththamizh.kalasam@gmail.com

The editor of "Muththamizh kalasam",

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka



# வாழ்தல் இனிது

- நிஷா ரஹ்மான்

"மனதில் உறுதி வேண்டும்.
வாக்கினிலே இனிமை வேண்டும்.
நினைவு நல்லது வேண்டும்.
கனவு மெய்யப்பட வேண்டும்.
தரணியிலே பெருமை வேண்டும்.
காரியத்தில் உறுதி வேண்டும்.
மண் பயனுற வேண்டும்"...

என்ற 'மகாகவி பாரதி' யின் கூற்றின்படி,

மனதில் உறுதி இருப்பின் மன நலம் தானே வரும். மனநலம் பேணுதல் என்பது எளிதான காரியம் அல்ல.. உடல் நலமின்றி இருப்பின் எளிதில் கண்டறியலாம்.

மனநோயை எளிதில் கண்டறிய முடியாது. தகுந்த கண்காணிப்பால் மட்டுமே அறிய முடியும்.

உடல் நலம் பேண... மனநலமே மிகவும் முக்கியமானது. மனநலம் கெடுவதால்.. முழு உடல் நலமும், கெட்டுப் போய்விடும். இது அனுபவபூர்வமாக கண்டறியப்பட்ட உண்மை.

'மனநலம் பேணும் வழிகள்'

மனநலத்தை பேண பல வழிகள் உண்டு. வளமான விதைகளை பொறுத்து பயிர்கள் விளைவது போல், மனதில் அனுமதிக்கும் நலமான எண்ணங்களை பொறுத்தே விளைவுகள் அமையும். பிறரை ஈர்க்க கூடிய மாற்றக்கூடிய பேராற்றல் உடைய ஒரே சக்தி மன சக்தி. உன்னால் முடியும் என்ற நம்பிக்கையை ஒவ்வொரு உள்ளத்திலும் உருவேற்றுங்கள்.

அந்நம்பிக்கை எத்தகைய தடைகளையும் தாண்டி செல்லும் ஆற்றல் படைத்தது. மனம் எப்போதும் விழிப்புணர்வோடும், தெளி வோடும் இருந்தால், சிக்கல்களில் இருந்து எளிதில் விடுபட முடியும். சூழ்நிலைகள் மாறக்கூடியவைகளே... அவை நிலைப்பதில்லை. அந்தந்த சூழ்நிலைக் கேற்றவாறு.. நடந்து கொள்வதும், அவற்றைக் கையாளும் விதமுமே.... அவற்றை இலகுவாக கடந்து போகக் கூடிய மன ஆற்றலை தருகிறது. நம் கண் முன்னே இருக்கும் பொருளை பல நேரங்களில் காணவில்லை என தேடுவோம்.

மனக்குழப்பமும், பதட்டமும் இருந்தால் தன்னிலையில் இருந்து மனம் மாறி விடும். நிதானம் பொறுமை இரண்டும்.. எந்த ஒரு மனநிலையிலும் மாறாமல் இருப்பதே நல்லது

மாவீரன் 'நெப்போலியன்' பிரிட்டனிடம்தோல்வியுற்றுதனிச்சிறையில் தனிமைப்படுத்தப்பட்டபோது, நெப்போலியனை காண வந்த நண்பர், ஒரு சதுரங்க அட்டையை கொடுத்து,

''சிந்தனையை சிதற விடாது உன்னிப்பாக இதை கவனித்தால் தனிமை நீங்கும்,'' என கூறிச்சென்றார்.

மன அமைதி குன்றிய நிலையில் இருந்த நெப்போலியனின் மனச்சிந்தனை செயல்படவில்லை. பின்னர் இறந்தும் போனார். பிற்காலத்தில் பிரான்ஸ் அருங்காட்சியகத்தில் நெப்போலியனிடம் இருந்த சதுரங்க அட்டையை ஏலம் விட ஆய்வு செய்த போது, அந்த அட்டையின் நடுவில் சிறிய அளவில் சிறையில் இருந்து தப்பிப்பதற்கான குறிப்பு இருந்தது கண்டறியப்பட்டது.

மாற்றங்களை ஏற்கும் மனோ வித்தையும், மாற்றமும், ஏமாற்றமும் வாழ்வில் அனைவருமே எதிர்கொள்ள வேண்டிய நிகழ்வு. தான் என்ற யதார்த்தமும் புரிந்து போனால்... அந்நிகழ்வை மன அமைதி யோடும் நம்பிக்கையோடும் எதிர் கொண்டு மனநலத்தை உருவாக்க முடியும்.

நினைப்பதெல்லாம் நடந்து விடுவதில்லை என்று சொல்லிக் கேட்டி ருப்பீர்கள். நீங்கள் ஒரு செயலை எத்தனை உறுதிப்பாட்டுடன் நினைக்கின்றீர்கள் என்பதே இதில் முக்கியம். ஏனெனில், உங்கள் எண்ணங்கள், திட்டங்கள் நிறைவேறு வதற்கான சாத்தியக்கூறு.. உங்கள் மன உறுதியைப் பொறுத்தே அமையப் பெறும்.. மனநிலை பேணுதல் என்பது... எல்லா சூழலிலும் இன்றியமையாதது.

மன நலமே.. ஒவ்வொரு தனி மனிதனுடைய ஆரோக்கியத்தை உறுதி செய்கிறது.

வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை இயல்பாக ஏற்றுக் கொள்ளும் மனம் வேண்டும். எதுவும் நிலையானதல்ல என்ற புரிதல் இருந்தால்,.. கஷ்டங்களைக்கூட கடந்து போய்விடலாம் என்ற தெளிவு பிறக்கும்.

சிறுவிதையே தனது முயற்சியால் மேல் தோலையும், கடினமான ஓட்டையும் தாண்டி, பாரமான பாறையும் விலக்கி, தன்முகம் காட்டும் போது ஆறறிவு கொண்ட மனிதனால் மனவலிமையோடு, நம்பிக்கையோடு, நேர்மறை எண்ணத் தோடு, தடைகளை தாண்டி, வெற்றியை காண முடியாதா என்ன?

இதுவும் கடந்து போகும்.. என்பதை நினைவு கூர்ந்து வாழ்வில் ஏற்படும் மாற்றங்களை மனதால் ஏற்றுக் கொள்ள தயாராக வேண்டும். விழிப்புணர்வோடு மனங்களைக் காப் போம். மனநலம் பேணுவோம். மன நலம் என்பது நம் கையிலும், நம்பிக்கை யிலும் தான் உள்ளது.

தெளிவான சிந்தனையும், தொலை நோக்குப் பார்வையும்.. சிறந்த மனநிலையும் ஒரு மனிதனை ஆரோக்கியமாக வாழச் செய்கிறது என்பதே... உண்மை நிலை.

இனிது! இனிது! வாழ்தல் இனிது!

நற்சிந்தனைகள் இனியும் தொடரும்.

---

# சுதந்திரம்

நானும் நீயும்
ஒரு கூட்டுக்குள்
சிறைப்பட்டு கிடக்க
அவசியமில்லை.

உனக்கான சுதந்திரமும்
எனக்கான சுதந்திரமும்
நிறையவே இருக்கிறதென்று
நினைக்கிறேன்.

அதோ! அந்த
பறவைகளைப் பார்
கால்நடைகளை பார்
அவைகளெல்லாம் முட்டித்
தள்ளுகிறது ஈன்றவைகளை.

நாம் மட்டும் ஏன்
அடைக்காத்துக்
கொண்டிருக்கிறோம்?
விட்டுவிடுவோம் நாம்
ஈன்றவர்களுக்கும்
தேவை சுதந்திரம்.

- மணவை கார்னிகன்

# முற்றுப்புள்ளி அல்ல முதற்புள்ளி...

நெடுங்காலச் சாபத்தின்
நீட்சிகளில் நீந்தி நீந்திக் கரைகாணாது
தவித்த்துக் கிடக்கும் பெருங்கூட்டத்தில்
நானுமொருவன்...

ஊறி ஊறி
உள்ளம் நசிந்து தொடக்கத்தில்
நீர் வழிய
நீரோடு நீர் கலப்பதைப்போல்
எதுவும் தெரியவில்லை...

ரத்த நரம்புகள் அறுந்துக்
கொஞ்சம் கொஞ்சமாய் சாபக்கடல் நீர்
நிறம் மாறும்போதுதான்
சாவின் வலியும்
இதுவரை வாழாதொரு வாழ்வைச்
சுமந்த வலியும் தொண்டையிறுக்குகிறது

பிணவறைக்குள்
பூச்சூடி நுழைவதுபோல்
பசியும் புறக்கணிப்பும் வலியும்
நெருக்கும் ஒருவனின் முன்
சிலரால் புல்லாங்குழல் இசைக்க
எப்படி முடிகிறதென்றக் கேள்விதான்
தப்பிக்க வழிதேடும் செயலுக்குப்
புள்ளி வைத்தது.

முற்றுப்புள்ளி அல்ல
முதற்புள்ளி...

தனக்கான வாழ்வை
யாரோ நிர்வகிக்கும் மூடத்தனத்தை
இனியும் மூடிவைக்க வேண்டாம்.
கருணையும் மனிதமும் பூசுவதற்கு முன்பு
அழுந்தக் கழுவித் துடைத்துவிடுவோம்
இந்த அழுக்கை...

நாம் கரையேறலாம்...
முடியாது போயின்
நேரான சீரானதொரு வாழ்வுக்கெனப்
போரிட்டு வீரமரணம் தொடலாம்.
நமது சடலங்களில்
கால் வைத்தேனும் நமது மக்கள்
கரையேறட்டும்.

ஒற்றைக் குற்றத்தைச் சுட்டியதல்ல
இக்கவியென்று
படிப்பவர் அறிவே
பங்கு பிரித்துவிடும்...
உணர்ந்தால் போதும்...

கற்பனையில் நான் சுவாசிக்கும்
சுதந்திரக் காற்றை
நாளையொரு நாள் நீங்களெல்லாம்
சிலாகித்து மகிழ்வதாய்க் கற்பனை
செய்கிறேன்...


இதுவரை கண்ட
எல்லா விடுதலையும் இப்படித்தான்
தொடங்கியிருக்கும்

**கா.ரஹ்மத்துல்லாஹ்**
சோழமாதேவி, திருப்பூர்

தமிழ்ப்பெண்ணை தேர்போலத் தாவணியில் கண்டேன்
உமிழ்நீரில் கூட உளங்கொண்டக் காதல்தேன்
சொட்ட எனைமறந்தேன் சொர்க்கம் தனையடைந்தேன்
கிட்ட நிலாவந்து கீழ்வானாய் நெஞ்சுக்குள்
சொட்டுதடி தேனாய்ச் சுகமெல்லாம் கைவருமோ?



**தமிழ்நெஞ்சம் அமின்,**
பிரான்சு




# மதிப்புரை வஃபீரா வஃபி

தமிழ்நெஞ்சம் இதழை ஐம்பத்தோரு ஆண்டுகளாக வெற்றிகரமாக நடத்தி வரும் தமிழ்நெஞ்சம் அமின் (பிரான்சு) அவர்களின் ஆக்கத்தில் உருவாகி அண்மையில் வெளியீடு கண்ட ‘சிங்காரவேலர்’ நூலை பற்றி சொல்வதற்கு முன், நூலாசிரியரைப் பற்றிக் கொஞ்சம் பார்ப்போம். வெளி நாட்டில் வசித்தாலும், தாய்த் தமிழைத் தலைமேல் தாங்கி உயிருக்கு நிகராக உணர்வில் சுமந்து தொண்டுகள் செய்யும் இவரின் முதல் நூல் ‘பாழடைந்த பங்களா’ எனும் திகில் நிறைந்த கதையாகும். இதுவரை ஐம்பதுக்கும் அதிகமான நூல்களை வெளியிட்ட இவர் புகழை விரும்பாத தன்னடக்கம் மிக்க பொதுநலத் தொண்டன் என்றால் அது மிகையில்லை.

சிங்காரவேலரைப்பற்றி இதற்கு முன் நானறிந்திருக்கவில்லை. என்னைப் போன்றே அவரைப் பற்றித் தெரியாத பல்லாயிரக் கணக்கான வாசகர்களுக்கு இந்நூல் சிறந்த ஆவணமாக அமையும் என்பது திண்ணம். நம் சமூகம் அதிகம் அறிந்து வைத்திருக்காத ஓர் ஆளுமையின் அடையாளத்தை, இவரின் எழுதுகோல் சுட்டியிருப்பதானது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

1860 ஆம் ஆண்டு சிங்காரவேலர் தென்னிந்தியாவில் பிறந்த

முதல் கம்யூனிஸ்ட் சிந்தனைச் சிற்பி யாவார். இவரைப் பற்றி நூலாசிரியர், தொழிற் சங்கங்கள் ஏற்படுத்திய பெருமைக்குரியவரென்றும் மதிய உணவுத் திட்டத்தின் முன்னோடி யென்றும், நாட்டு விடுதலைக்காகத் தன் தொழிலையே துறந்தவ ரென்றும் குறிப்பிடுகிறார். இருபதாம் நூற்றாண்டின் சீரிய சிந்தனையாளர்களுள் போற்றத் தகுந்த சிந்தனையாளர் இவரென்றும் ஆணித்தரமாகக் குறிப்பிடும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள், தன் நூலில் இன்னும் பல விடயங்களைத் தெளிவு படுத்துகிறார். பல பெருந்தகைகள் இவரை நினைவு கூர்ந்து பல நூல்கள் எழுதியிருந்தாலும், இவரின் செயற் பாடுகள் தமிழகத்தில் வெளிச்சம் பெறவில்லை எனும் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்கள், சிங்காரவேலருக்கு தான் செய்யும் நன்றிக்கடனாக இந்நூலை படைத்திருப்பதாகவும் குறிப்பிடுகிறார்.

பிறர் நலனுக்காக தன் சொத்தை அரசுடைமைஆக்கியவர் ,விடுதலைக்காகத் தன்னையே தியாகம் செய்தவர். தொழிலாளர் உரிமைக் காகவும், மகளிர் விடுதலைக்காகவும் பாடுபட்டவர். பல போராட்டங்களை முன்னின்று நடத்திய தோடல்லாமல், பல இதழ்களையும் வெற்றிகரமாக நடத்தியவர் என்ற பெருமையும் சிங்கார வேலருக்குண்டு.

இவரின் அறிவியல் பூர்வமான கருத்துகளும், சமதர்மக் கொள்கை களும் இந்தியாவில் வேரூன்றி இருக்குமானால் இந்தியா ஒருசமதர்மநாடாக இருந்திருக்க முடியும் என புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிட்டதையும் நூலாசிரியர் சுட்டிக் காட்டுகிறார். அதோடு, சிங்காரவேலர் பற்றிய பல அறிஞர்களின் கருத்துக்களையும் மேற் கோள் காட்டியிருப்பது குறிப்பிடத் தக்கது.

நாம் விரும்புவது உண்மையான சுதந்திரம். அதன் மாயையன்று. அந்தச் சுதந்திரம் மக்கள் உடமையாகவும், மக்களாலும் மக்களுக் காகவும் இருக்க வேண்டும்.மக்கள் சுதந்திரமாக விளங்க வேண்டும். அவ்வாறில்லாமல் அது வெறும் ஜனநாயக சுதந்திரமாகவும், பாராளுமன்ற சுதந்திரமாகவும் அமையக் கூடாதெனவும் சிங்காரவேலர் பகிரங்க மாக எழுதியதாகவும், காந்தியின் தீவிரத் தொண்டனாக இருந்தாலும், அவர் கொள்கைக்கு மாறாக காந்திஜி உண்ணா விரதம் இருந்தார் என்பதைக் கண்டித்து எழுதியுள்ளதாகவும் மேலும் தான் நடத்தி வந்த இதழ்களில், மக்களின் மூட நம்பிக்கைகளைத் தகர்த்து, தொழிலாளர் களின் வளர்ச்சிக்கு பாடு படுவதைக் குறிக்கோளாக கொண்டு எழுதி வந்திருப்பதையும் இந்நூலின் மூலம் அறிய முடிகிறது..

அவர் மிக முக்கியமாக வலியுறுத்தி வந்த ஒரு கருத்தாவது, பொருட்களை அளவுக்கு அதிகமாக உற்பத்தி செய்தும், உற்பத்தி செய்பவனுக்கும் வாங்கி அனுப விப்பவனுக்கும் இடையில் இருக்கும் மூன்றாவது மனிதனே பொருட்களின் விலையை நிர்ணயம் செய்பவனாக இருந்து கொண்டு உலகில் பஞ்சம், நோய், கஷ்டங்கள், அமைதியின்மை, வேலை நிறுத்தங்கள், இராஜ்ய புரட்சி கள் போன்றவை ஏற்படக் காரணியாக அமைகிறான் என்ற மாபெரும் உண்மையை போட்டு உடைக்கும் சிங்காரவேலர், உண்மையிலேயே


போற்றத்தக்கவர்தான்.

இந்நூலில் வரிக்கு வரி வியப் பூட்டுவது அவரின் கொள்கைகளும், நேர்மையான செயற்பாடுகளும். இதுவரை தமிழக அரசினால் கண்டு கொள்ளப்படாத இவரின் கொள்கை களும், போராட்டங்களும், தியாகங்களும் வரலாறு படைக்கக் காத்திருக்கும் இளைய சமுதாயத்தினருக்கு போய்ச் சேர வேண்டுமானால், சிங்கார வேலரைப் பற்றிய வரலாறு, பள்ளிப் பாடத்திட்டங்களில், பாடப்புத்தகங்களில் உள்ளடக்கப் பட வேண்டும். இந்நூலில் பல அனுபவப்பாடங்களும் நெறியான வாழ்வுக்கு பல வழிகாட்டல்களும் சிங்காரவேலரின் வாழ்க்கை வரலாற்றிலி ருந்து நமக்கு கிடைக்கின்றன.இப்படிப் பட்ட அரிய நூலை அசராமல் எழுதி எமக்கு வெகுமதியாகச் சேர்த்திருக்கும் தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கு பாராட்டுகளையும் நல்வாழ்த்துகளையும் வாசகர் சார்பாக தெரிவிக்கிறேன்.

நூல் தொடர்புகளுக்கு :
French Publication, Chennai
Email:
frenchpublication@gmail.com

# போட்டுக் கொளுத்து

(வெண்பா யாப்பு)



வேலியாய் நல்லொழுக்கம் பேணா திளைஞரிடை
பாலியலைத் தூண்டுகின்ற வக்கிரத்தைக் -கூலிக்காய்
வண்ணப் படங்களுடன் வார்க்கின்ற ஏடுகளைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

தலையினில் தேங்காய் உடைப்பதுடன் ஆட்டின்
தலையைப் படைப்பதுவா பக்தி- கொலைகளையா
கண்ணீரை மாற்றும் கடவுளேற்பார் - மூடத்தைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

ஆன்றஅற நூல்கள் அறிவியல்நூல் ஆன்மீகம்
போன்ற பலதுறையில் பெற்றிருக்க - மான்விழியே
தண்டமிழில் ஆகாது கல்விகற்க என்போரைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

வேதங்கள் எல்லாமே வேண்டாத குப்பைகள்தாம்
வாதத்திற் கொவ்வாத ஏடுகள்தாம்- பாதகமாய்ப்
பண்டில்லா வர்ணத்தில் பாகுபாடு செய்வதனால்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

சாதிமதம் வேறென்று காதலரைப் பெற்றோரே
வீதிகளில் வெட்டியே வீசுகின்றார்-நீதியாமோ
பண்பற்ற இச்செயலைப் பார்ப்பதுவோ அன்னாரைக்
கொண்டுவந்து போட்டுக் கொளுத்து!

**பாவலர் கருமலைத் தமிழாழன்**

# இயற்கையைக் கவனி!

மலைமுகடுகள் வரிசையாய்த்
தலை நிமிர்ந்து நின்றிட
மூடுபனி முத்தமிட்டு அணைக்க,
கூடிய மேகங்கள்,  பொழிந்தன மழை.
அருவி, ஆபரணமாகி அழகூட்ட,
நீர் முத்துகளை உருட்டிச் சிரிக்க,
அண்டமெல்லாம் விகற்பமின்றி
விரிந்து பாய்ந்தோட,
செல்லிடமெங்கும், தருக்களின் அணிவகுப்பு !

தலையசைக்கும் இளந்தளிர்கள்!
மணம் வீசும் வண்ண மலர்கள்!
மகிழ்ந்து தேனருந்தும் தேனீக்கள் !
ஒன்றையொன்று தழுவி
ஒன்றோடொன்று இணைந்து
இன்பத்தை வாரியிறைக்கிறது,
இயற்கை!
இயல்பாய் அதைக் கூறுபோடும்
உன்மத்தர்கள்!
முல்லை வளஞ் சுரண்டல்,
குறிஞ்சி மலையைக் கூறு போடல்,
நெய்தல் முந்நீரில் குப்பைகளைக்கொட்டல்!

இயற்கையோடு இணையாமல்
இன்னல் இழைக்க,
இயற்கை,
நிலச்சரிவாய், பூகம்பமாய்,
ஆழிப்பேரலையாய்,
சினந்து பொங்குகிறது!
கவனியுங்கள் , உன்னிப்பாய் அவற்றை!
திருந்துங்கள்!
இயற்கையைக் கவனிக்க
இன்முகத்தோடு,
அடுத்த தலைமுறை
சிறக்கும், சிரிக்கும்.
உவக்கும், உய்யும்.



**செ.கலைவாணி,**
மேட்டூர்அணை. 3

# மாயை போதை...!!

மனக் கண்ணில் மாயாஜாலம் காட்டி
மற்றவர் மனதில் உறவை நிலை நாட்டி
மகத்தான உறவு என வித்தை காட்டி
மாயையான விடயங்கள் பல
அரங்கேறும் மனம் திறந்த மேடை...!!

தனிமையின் தூண்டுதலால்
தன்னிலை மறந்த இதயங்களால்
தான்தோன்றித் தனமாக
பொழுதை நகர்த்தும் விசை...!!

கண் கொண்ட மயக்கத்தால்
கானல் நீர் கூட
கடலாய்த் தோன்றும்...!
காதல் என்ற பெயரில்
இருப்பதை இழந்து விட்டு
இல்லாத ஒன்றுக்காய் ஏங்கச் செய்திடுமே...!!

வாழ்க்கை என்றால் என்ன என்பதே தெரியாமல்
இதயத்தை இயந்திரமாக்கி
இரவு பகலாக விழித்திருந்து
வீணடித்த பொழுதுகளை எல்லாம்
நினைத்து நினைத்து
விம்மி அழச் செய்திடுமே...!!

அழகழகாய் அன்புப்பூக்கள்
அவரவர் காலடியில் பூத்துக் கிடக்க
காகிதப் பூக்களுக்காக
கதை கதையாக சொல்ல வைத்திடும்..!
கனவுலகில் மிதந்து
கனவுலகில் வாழ்ந்து
கடைசியில் அவர் வாழ்வையும்
கனவாக ஆக்கிடுமே...!!

தூங்கும் போது விழித்திருக்கச் செய்து
விழித்திருக்கும் போது தூங்கச் செய்து
தாம் இழந்து போவது
எது என்பதே அறியாமல்
சோகத்தைக் கூட
சுகமான சுமை என சுமக்கச் செய்திடுமே...!!

நாட்டு நடப்பையும் அறியத் தந்திடும்!
வீட்டு நடப்பையும்
வீதிக்கு கொண்டு வரும்!
வீண்பழி சுமக்கச் செய்து
விடியாத இருளுக்குள்
விடியலை தேடி தேடி அலைய வைத்து
விளக்கில் வீழ்ந்த விட்டில் பூச்சிகளாய்
எம்மை விதியோடு விளையாட வைத்திடுமே...!!

விற்பனையில் வினோதம் காட்டி
வேண்டிய பொருளை புறக்கணித்து
விற்பனை பொருளை விரும்பச் செய்து
பணமீட்டச் செய்யும்
சிறந்த வியாபாரி...!!

உறவின் அருமை புரியாது
உணர்வுகளுக்கு அடிமையாகி
எம்மை அரிதாரம் பூசிய முகங்களோடு அலையவிடும்
சிறந்த ஒப்பனையாளன்..!!

நாம் நடந்து வந்த பாதையை
திரும்பிப் பார்க்க வைத்திடாது
போகும் பாதையும் புரிந்திடாது
துரத்தி வரும் துன்பம் அறிந்திடாது
தூக்கத்தில் வரும் பகல் கனவாய்
ஆக்கிடுமே நம் வாழ்வை...!
நூலறுந்த பட்டமாய் அந்தரத்தில் தொங்க வைத்து
தொடர்கதை ஒன்றை சிறுகதையாக்கி
விடையில்லா விடுகதையாக
எம்மை திண்டாட வைத்திடுமே...!!

விழித்துக் கொண்டே உறங்கியது போதும்!
விழித்திருப்பது உன் விழிகள் மட்டும் தான்
என்பதை புரிந்து கொள்!
உன் பாதையை மாற்றிவிடு!
பயணத்தை தொடர்ந்திடு...!!

நல்ல உறவுக்கு கைகொடு!
நட்புக்கு வழிவிடு!
நன்மை தீமை புரிந்திடு!
நாட்டு நடப்புகளைத் தெரிந்திடு!
நல்லவனாக வாழ்ந்திடு!
நாளைய சந்ததிக்கு வழிகாட்டிடு...!!!

கவிஞர் தாரகை நிப்ரா வகாப்
(நீர்கொழும்பு)

# மிதிவண்டி பயணம்

நினைவுகள் பின்னோக்கி பயணிக்கின்றன
நிறைவான அந்த பிள்ளைப் பருவத்திலே
வாசலில் க்ரீங்..க்ரீங்...மணியோசை
அப்பாவின் அன்றைய ஸ்கார்பியோ வந்துவிட்டது
டைனமோ இல்லாத ஹெர்குலீஸ் மிதிவண்டி!

புன்னை மரநிழலிலே புதுப்பெண் நிற்பதுபோல
புத்தம் புது மிதிவண்டி ஓய்வெடுக்குமே
மூன்று கிலோமீட்டரில் இருக்கும் பாடசாலைக்கு
ஓட்டமும் நடையுமாக சென்ற அப்பாவின் பாதங்களுக்கு
சற்றே ஓய்வளித்த மிதிவண்டி அது!

முப்பத்தைந்து ஆண்டுகள் சுழன்றது
காலச் சக்கரம் மட்டுமல்ல...
மிதிவண்டியின் சக்கரங்களும் தான்
இளம் பிராயத்திலே பின்னால் நான் அமர்ந்து
அப்பாவின் இடுப்பை இறுக்கிப் பற்றிக்கொள்ள
காற்றிலே மிதக்கும் மிதிவண்டி பயணம்!

கல்விக்கூடம் முதல் காய்கனிக் கடை வரை
நூலகம் முதல் வயல்காடு வரை
தேவராஜ் மாமா வீடு முதல் தென்பெண்ணை ஆறுவரை
காலைப்பொழுதிலும் மாலைப்பொழுதிலும்
கார்கால மழைதனிலும் காற்றடிக்கும் ஆடியிலும்
அப்பாவோடு பயணித்த அழகிய மிதிவண்டி பயணம்!

இதோ நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக
நானும் வளர்ந்துவிட்டேன்...
விடுமுறை நாட்களில் அரைப்பெடல் போட்டு
அவ்வப்போது நானும் கற்றுக்கொண்டேன்
அய்யாசாமி டாக்டர் வீட்டருகே நான் வீழ்ந்து
ஐந்து தையல் போட்ட நாட்களின் வடு
இன்னமும் என் தலையில் தழும்பாகத்தான் உள்ளது!

விழுந்தும் எழுந்தும் விரைவாய் கற்றுக்கொண்டு
வீதிவழியே நான் மிதிக்க
விண்ணில் பாயும் ராக்கெட்டாய் மிதிவண்டி பயணம்
சரிதாவை சைட் அடித்ததும் இதே மிதிவண்டியில்தான்...
சாகசமாய் இரு கைகளை விட்டுவிட்டு பறந்ததும்

இதே மிதிவண்டியில் தான்...
ஆயுதபூஜை வந்துவிட்டால் போதுமே
அழுக்கை துடைத்து அங்கங்கே எண்ணெய் போட்டு
அம்சமாய் பொட்டு இட்டு மாந்தளிர் கொத்து வைத்து
மனதை மயக்கும் வண்ணபலூன்கள் கட்டு
ஊரையே சுற்றி சுற்றி உல்லாசப் பறவையாய் மிதிவண்டி பயணம்!

என்னை அமர்த்தி ஊர்வலம் கூட்டிச் சென்ற அப்பாவை
இப்போது நான் அமர்த்தி அழைத்துச் சென்றேன்
மிதித்து மிதித்து தேய்ந்து போன கால்கள்தானே...
ஓய்வெடுக்கட்டும் இனி...
காடும் மேடும் கழனியும் அலைந்து திரிந்து
சுகமாய் எங்களை சுமந்து
காலங்கள் பல காற்றாய் பறந்த மிதிவண்டி
இப்போது வீட்டின் மூலையில் தலைநரைந்த கிழவன் போல
பஞ்சுகளும் துருப்பிடித்த பாகங்களும் தான் மிச்சம்!

குட்டி மிதிவண்டி குதூகலிக்கிறது இப்போது
எனது மகனின் கைகளில் லாவகமாக
இப்படியும் அப்படியும் வளைந்தோடுகிறதே
அதே வாசலில் நானும் என் தந்தையும்
பார்த்துப் பார்த்து மகிழ்கிறோம்...
எனது மகனின் மிதிவண்டி பயணத்தை!

**கவிஞர் சாரா**
மணலூர்பேட்டை
கள்ளக்குறிச்சி

---

# மஞ்சம் விரித்தான் மகிழ்ந்தே



அந்திப்பொழுதின் அலைகள்
சந்தமிசைத்தே சிந்து பாடிட
சொந்தம் கொண்டாடிட நினைந்து
வஞ்சியவள் கொஞ்சும் மொழி பேச
பஞ்சிலிட்ட நெருப்பெனவே மன்னனவன்
துஞ்சும் நிலை களைந்து
மஞ்சம் விரித்தான் மகிழ்ந்தே
தஞ்சமடைந்தாள் கோதையும் குளிர்ந்தே

**கவிஞர் தென்றல் கவி**



## நிறமற்ற உலகம்

ஏகாந்தத்தின் தீவிர புள்ளிகளை
தீட்டிய வரைவுகளாய்
பிரதிபலிக்கின்றன ஓவியங்கள்
அதிர்வுகளின் ஆரவாரங்களில்
நடுங்கியபடியே நழுவி நிற்கிறது
ஒரு கூச்சல்
இரவின் வீதிகளில் கண்சிமிட்டும்
நட்சத்திரங்களிடையே
ஒரு மௌனத்தை
உணர்த்தியபடியே
நகர்கிறது வான்நிலவு
இருளின் ஒளிச்சுடரில் மட்டும்
அத்தனை முகங்களும்
அழகாய் பிரகாசிக்கின்றன
பெரும்வனத்தில் இறுகிய
மலைகள்
எப்போதும் சப்தமிடுவதில்லை
முடிவிலியாய் தொடரும் நதியின்
ஓட்டத்தில் தொடக்கம்தான்
எங்கே?
இயல்புகள் அற்ற நெடும்
பயணத்தில்
பெரும் தூறலாய் பெய்யவே
ஆசைப்படுகிறது ஒரு மழை
ஆனால் நிறமற்ற உலகின்
இந்த நிசப்தங்களை
யார்தான் விரும்புவார்கள்?

**நெல்லை சோமசுந்தரி**
சென்னை- இந்தியா

## அஞ்சாத வீரனாய் அகிலத்தில் நில்.

அஞ்சி நின்றால் அவலம் கூடுமே
அஞ்சா தியங்க அனைத்தும் சேருமே!
கஞ்சம் கொள்ள கருணை மறையுமே
கருணை பொழிய காலம் போற்றுமே!
நஞ்சை விதைக்க நஞ்சே விளையுமே
நன்மை பரப்ப நலமே கிட்டுமே!
பஞ்சம் உடைக்க பாடு படணுமே
படுத்தே யுறங்க பாரம் கூடுமே!

எண்ணம் உயர்வாய் என்றும் வேண்டுமே
எல்லா வளமும் எல்லோர் பெறணுமே!
கண்ணின் ஒளியைக் காக்க வேண்டுமே
காணும் காட்சிக் குளிர்ச்சித் தரணுமே!
வண்ணக் கனவு வாழ்வைக் கடத்துமே
வலியை மறைக்க வலுவாய் மாறணுமே!
உண்ணும் உணவு உடலைத் தரணுமே
உறங்கா திருந்தே உயர்வை பெறணுமே!

தாய்மை உணர்வால் தரணி வாழுமே
தாயை வணங்க தனமும் பெருகுமே!
வாய்மை ஓங்க வறுமை ஒழியுமே
வளர்ச்சிப் பெறுக வலிமை பெறணுமே!
பாய்போ லிருக்க பலமும் குறையுமே
பாசாங் குசெய்ய  பண்பு கெடுமே!
மெய்யை விரும்ப மேன்மை வருமே
மெல்ல மாற மயக்கம் தீருமே!

**நா.பாண்டியராசா**

1. கரடுமுரடான பாதை
   கவலையின்றி பயணிக்கிறது
   எறும்புகள் கூட்டம்

2. வெற்றிடத்தை நிரப்புகிறது
   மேஜை வந்தமர்ந்த
   பறவை.

3. தோட்டம் நிறைய பூக்கள்
   பறிக்கையில் சப்தம் போடுகின்றன
   ரீங்காரமிடும் தேனீக்கள்

**ச. இராஜ்குமார்**
திருப்பத்தூர் மாவட்டம்

# பெண் என்னும் பேருண்மை

ரெட்டைப் பின்னலுக்கும் ஒற்றைத் துணி இரண்டாக்கி
பரட்டைத் தலைசீவி பள்ளிக்குச் சென்றுவந்து பின்
பழங்கஞ்சி பசியாறி பரண், பட்டி சுத்தம் செய்து
இளங்கன்று குளிப்பாட்டி இரவுவரை பணிசெய்து
சிறுவேலைகள் யாவும் குறைவின்றி செய்வதினால்
சிறுமி என்றே உனை அழைப்பார்.

கற்பை கருப்பை பொறுப்பை சுமந்து
கட்டியவன் தாலியோடு பிள்ளையையும் சுமந்து
எட்டி அவன் உதைக்கையில் அதையும் சுமந்து
பெட்டி இழைத்தும் பெரும்வலிகள் அதை மறைத்தும்
மனைகாத்து நிற்பதனால் மங்கையிவள் பெயர் மனையாள்

தென்றலாய் பிறந்து புயலாய் புறப்பட்டு
பொறுப்பாய் நெருப்பாய் நெறிமுறை சிறப்பாய்
விருப்பாய்  உறுப்பாய் வாழ்வின் திறப்பாய்
இருப்பாய் ஒளிதர உன்னையே ஒறுப்பாய்
இதன்பொருட்டு இவ்வுலகில் உன் பெயர் தாய்.

பெண்ணாகப் பிறந்தும் பெருந்துன்பம் தனைச்சுமந்தும்
முன்னாலே வருவதற்கு முட்டுக்கள் தான் கடந்தும்
பின்னாலே பதவி வந்தோர் பரிகசிப்பை தான் கேட்டும்
உன்னாலே முடியாதென  உலகமே சிரித்தாலும்
தன்னாலே முயன்று வந்து தலைமையேற்று நிற்பதினால்
தலைவி என்று போற்றிடுவார்.

உடனிருப்போர் உசுப்பேற்றுவோர் உறவுக்கு அழைப்போர்
கடன் கேட்போர் கடன் தருவோர் கண் பார்க்காது கதை அளப்போர்
இடைவிலக எட்டிப்பார்ப்போர் எடை போட்டு ஏளனிப்போர்
படைதிரட்டி பகை வளர்ப்போர் பழிவாங்க காத்திருப்போர்
இவர்கள் முன்னும் இன்னும் இயங்கிக்கொண்டு இருப்பதினால்
எந்தன் பெண்மை கொண்டு உலகை வெல்வேன் என்பதே உண்மை.

**- பிரகவி**
(ஆர்.ஜே.பிரகலாதன்)



# மாதவிடாய்ச் சிக்கல்களும் அதற்கான தீர்வுகளும்
# (MENSTRUAL IRREGULARITIES AND SOLUTIONS)



**டாக்டர் ஜலீலா முஸம்மில்**
வைத்திய அதிகாரி
போதனா வைத்தியசாலை மட்டக்களப்பு
இலங்கை

பெண்கள் என்றாலே நமக்கு ஞாபகத்துக்கு வருவது அவர்களின் அர்ப்பணிப்புகள்தான். அவ்வாறான பெண்கள் எப்படியான அவஸ்தை களை அனுபவிக்கிறார்கள் என்று பெரும்பாலானவர்களுக்குத் தெரிவ தில்லை. அவர்களுக்கு வரும் தொல்லை களைப் பற்றி யோசிப்பது மில்லை.

''எனக்கு 28 நாள் இடை வெளியில பீரியட்ஸ் வந்துடுது... இது சரிதானா?''

''எனக்கு ரெண்டு மாசத்துக்கு ஒருதடவைதான் பீரியட்ஸ் வருது. ஒரு வேளை ஏதாவது உடம்புல பிரச்னை இருக்குமோ?''

''ஒவ்வொருத்தரோட உடல் நிலையைப் பொறுத்து, நாள் கணக்கு மாறலாம்னு படிச்சிருக்கேன்... எனக்குக் கண்டபடி மாறுதே...'' - இப்படி ஒழுங்கற்ற மாதவிடாய் குறித்த ஏராளமான சந்தேகங்கள் பலருக்கும் இருக்கின்றன.

இன்றைய இளைய தலை முறையிடம், மாதவிடாய் பற்றிய பெரிய விவாதமே நடந்துவருகிறது. மாதவிடாய் என்பது `அசுத்தம்' என்று கூறப்பட்ட பழைய கருத்துகளை ஒதுக்கி, அது ஓர் உடல்நிலை மாற்றம் என்பதை அனைவரும் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் பலராலும் கண்டுகொள்ளப்படாத மாதவிடாய்ச் சுழற்சியின் மறுபக்கமே, ஒழுங்கற்ற மாதவிடாய். இது இன்றைக்கு பல பெண்கள் சந்தித்து வரும் முக்கியமான பிரச்னை.

சாதாரணமாக பெண்களின் மாதவிடாய்ச் சக்கரமானது 4-7 நாள் ஏற்படுகிறது. மேலும் மாதாந்தம் 28 நாற்களுக்கு ஒரு முறை இந்த வட்டம் இடம்பெறும். சாதாரணமான வேறுபாட்டெல்லை (Range) 28-35 நாட்கள் ஆகும். மாதவிடாய்ச் சிக்கல்களை அறிந்துகொள்ளும் முன்பதாக சாதாரணமான மாதவிடாய் வட்டம் பற்றி அறிந்து கொள்வது நல்லது.

### சாதாரணமாக மாதவிடாய் ஏற்படும் முறை (Normal Menstrual Cycle)

மாதவிடாய் (Menstruation/ Period) என்று பொதுவாக அறியப்படுவது அல்லது மாதவிலக்கு என்பது ஒரு பூப்படைந்த பெண்ணின் உடலில், மாதந்தோறும் சுழற்சி முறையில் நிகழும் ஒரு உடலியங்கியல் மாற்றமாகும்.

இது பெண்ணின் இனப்பெருக்கத் தொகுதியிலுள்ள ஒரு உறுப்புக்களில் ஒன்றான கருப்பையிலிருந்து, யோனி யினூடாக மாதத்தில் 3-7 நாட்கள் குருதியுடன் சேர்ந்து கருப்பையின் உள் சீதமென்சவ்வும் வெளியேறுவதை குறிக்கும்.

மருத்துவப்படி, ஒவ்வொரு மாதமும், கருத்தரிப்பிற்கான தயார்ப் படுத்தலுக்காக, கருப்பையின் உள் மடிப்புகளில் (endometrium) போதிய இரத்தம் நிரம்பி இருக்கிறது. ஒரு பெண் கர்ப்பமடைவாரேயானால், கருப்பையில் தங்கும் கருக்கட்டிய முட்டைக்கு போதிய ஊட்டச்சத்தை வழங்குவதற்காகவே, இந்த குருதி நிறைந்தமடிப்புக்கள்உருவாகியிருக்கும். பெண் கருத்தரிக்காத நேரங்களில் இம்மடிப்புகளில் உள்ள தேவையற்ற இழையங்களும், அவற்றுடன் சேர்ந்து மடிப்புக்கள் இருக்கும் நுண்ணிய குருதிக் குழாய்களிலிருந்து வெளிவரும் குருதியும் வெளியே கழிவாக தள்ளப்படுகிறது. இந்நிகழ்வு மாதந்தோறும் சுமார் மூன்று முதல் ஏழு நாட்களுக்கு நடைபெறுகிறது. இதனையே மாதவிடாய் என்கிறோம். இந்த மாதவிடாய் வெளியேற்றம் மாதத்திற்கு ஒருமுறை யோனிமடல் ஊடாக நடைபெறுகிறது. இறுதி நாளோ அல்லது கடைசி இரு நாட்களோ வெளியேற்றம் குறைவாக இருக்கும். சில வேளைகளில் முதல் நாள் குறைவாக இருக்கும்.

கருத்தரித்திருக்கும் காலத்திலும் குழந்தை பிறந்த சில மாதங்களுக்கும் மாதவிடாய் இருப்பதில்லை. அதாவது, குருதிப்போக்கு இருப்பதில்லை. இச்சுழற்சி மீண்டும் துவங்கும்வரை, பாலூட்டும் காலத்தில் கருத்தரிப்பு நடக்காது. சில குறிப்பிட்ட பாலூட்டும் பழக்கங்களை பின்பற்றினால் இந்த காலத்தை நீடிக்க முடியும். இதனை குடும்பக் கட்டுப்பாட்டு முறையாகவும் கையாளலாம்.

பெரும்பாலான பெண்கள் மாத விடாயின்போது 50 மி.லி. வரை உதிரம் இழக்கிறார்கள். இந்த நாட்களில் தங்கள் உள்ளாடைகள் கறைபடாதிருக்க அணையாடை அல்லது அடைப்பான் (Napkins) பாவிக்கின்றனர். கர்ப்பம் தரித்திருப்பதற்கான முதல் அடையாளம் மாதவிலக்கு நிற்பது என்றாலும் சில வேளைகளில் கருத்தரிக்காமலேயே மாதவிலக்கு நின்றிருக்கும். மாதவிலக்கு நிற்பது இந்த நிலைக்கு உடல் இயக்கங்களும், நோய்களும் முக்கிய காரணமாக இருக்கும். குறிப்பாக புதிய இடங்களில் குடியேறுதல், புதிய சூழல்களில் பணியாற்றுதல், டீன் ஏஜ் பருவத்தின் கடைசியில் இருத்தல், அதிக கவலை, டென்ஷன், போன்ற மனநிலைகளில் இருத்தல், குறிப்பிட்ட காலத்தில் ஹார்மோன்கள் முட்டைகளை வெளியிடாத நிலை ஆகிய காரணங்களாலும் மாதவிலக்கு நின்றிருக்கும்.

## மாதவிடாய் நிறுத்தம் (Menopause)

மாதவிடாய் நிறுத்தம் என்பது, 45-70 வயது காலகட்டத்தில் ஒரு பெண்ணில் மாதவிடாயினால் ஏற்படும் உதிரப்போக்குநின்றுவிடுவதைக்குறிக்கிறது. இக்காலத்தில் பெண்ணின் பாலின பண்பிற்கு காரணமான எஸ்ட்ரோஜன் எனும் நொதி சுரப்பது குறைகிறது. காரணமின்றி எரிச்சல்படுவது, உடல் வெப்பமடைதல், யோனி எரிச்சல் மற்றும் உலர்ந்திருத்தல் ஆகியன சில அறிகுறிகளாகும். மாதவிடாய் நிறுத்தம் ஏற்பட்ட பெண்கள், அதன் பின்னர் இனப்பெருக்கத்தில் பங்கேற்க இயலாது. பெண்கள் எதிர்நோக்கும் மாதவிடாய்ச் சிக்கல்கள் ஆவன.

1. 28 நாட்களுக்கு முந்தைய மாத விடாய் அல்லது 35 நாட்களுக்குப் பிந்தையதான மாதவிடாய்.
2. Amenorrhea-மாதவிடாயின்மை 3 அல்லது 3 இற்கு மேற்பட்ட மாதங்களாக மாதவிடாய் வராமல் விடுதல். ஒரு பெண் கர்ப்பிணியாக இருத்தல் அல்லது பாலூட்டும் தாயாக இருத்தல் அல்லது மாத விடாய் நிறுத்தத்தில் இருத்தல் போன்ற காரணங்கள் தவிர்ந்த 90 நாட் களுக்கு மேற்பட்ட மாதவிடாய் இன்மை அசாதாரணமாக கருதப் படுகிறது. சரியான மார்பக வளர்ச்சி கொண்ட15 தொடக்கம் 16 வயதுடைய வயதுக்கு வராத பெண்களும் இந்த பகுதியில் அடங்குவர்.
3. (Oligomenorrhea) வழமைக்கு மாறான குறைந்த உதிரப் போக்கு.
4. (Menorrhagia) வழமைக்கு மாறாக கூடுதலான அளவு கூடுதலான நாட்கள் உதிரப் போக்கு
5. மாதவிடாய்க் காலத்தில் கடுமை யான வயிற்று வலியும் வாந்தியும். (Dysmenorrhea)
6. மாதவிடாய்க்கு இடைப்பட்ட காலத் தில் அல்லது மாதவிடாயின் நிறுத்தத் தின் பிறகு, உடலுறவின் பின் அசாதாரணமாக உதிரம் கொஞ்சம் கொஞ்சமாக வெளியேறுதல் (Spotting).

காரணிகள் (Causes)
முதலாவது காரணி...

1. அழுத்தமான வாழ்வும், வாழ்க்கை நடைமுறை மாற்றங்கள் - (Stress and Lifestyle Factors)

உடல்நிலை மாற்றங்கள் அதாவது உடல் எடை கூடுதல் அல்லது குறைதல். உணவு கட்டுப்பாட்டை மேற்கொள்ளுதல் (Dieting). உடற்பயிற்சி மாற்றங்கள் உடல் வருத்தும் நோய்கள் நோய் என எடுத்துக்கொண்டால், நாட்பட்ட நோய்கள், இரத்தச்சோகை, ஊட்டச்சத்துக் குறைபாடுகள், உடற் பருமன், நரம்புத் தளர்ச்சி நோய் போன்றவை. வழமையான உடற்பயிற்சி செய்தலில் மாற்றங்கள் ஏற்படுதல். நாளாந்த வாழ்க்கை சமநிலையில் மாற்றங்கள் ஏற்படுதல்.

இரண்டாவது காரணி..

2. கருத்தடை மாத்திரைகள் இந்த வகையான மாத்திரைகள் ஈஸ்ட்ரஜன் புரஜஸ்ட்றோன் போன்ற ஓமோன் களால் ஆனது. இவை சூலகத்திலிருந்து முட்டை களின் வெளியேற்றத்தை தடுப் பதன் மூலம் மாதவிடாய்ச் சக்க ரத்தைப்பாதிக்கிறது. மேலும் இந்த மாத்திரைகள் பாவித்து நிறுத்திய பின்னரும் கூட சாதாரணமாக மாதவிடாய் ஆறுமாதங்களுக்கு வருவதில்லை. இதுவும் பெரிய ஒரு பின்விளைவாக அமைகிறது. ஏனெனில் இந்த காலகட்டத்தில் கருத்தரிக்கும் திட்டம் இருந்தால் அது சாத்தியப்படுவதில்லை. ப்ரோஜெஸ்ட்ரோன் (Progesterone) மட்டும் கொண்ட ஓமோன் மாத்திரைகள் மாதவிடாய் சக்கரத்தின் இடையிலும் கூட குருதி வெளியாதலை (bleeding in between periods) ஏற்படுத்துகிறது.
3. கருப்பையில் உருவாகும் சாதாரண கட்டிகள். (Uterine Polyps and fibroids). பொலிப்ஸ் மற்றும் பைப்ரொய்ட்ஸ் எனப்படுபவை கருப்பையில் தொங்கிக் கொண்டிருக் கும் புற்றுநோய்த் தன்மையற்ற கட்டிகள் ஆகும். இவை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கை களில் காணப்படலாம்.

அத்தோடு மிகச்சிறியதிலிருந்து (ஒரு திராட்சை விதை அளவு) பெரியளவு (ஒரு அப்பிள் பழத்தினளவு) வரை அதனளவு வேறுபடலாம். இவை கூடுதலான உதிரப் போக்கையும் வலியையும் மாதவிடாய்க் காலத்தில் ஏற்படுத்துகின்றன.

4. என்டோமற்றியோசிஸ்(Endometriosis) எனப்படும் கருப்பைப் படலம். Endometriam எனப்படும் கருப்பை மேலிழையம் ஆனது ஒவ்வொரு மாதவிடாயின் போதும் உடைந்து உதிரத்துடன் வெளியாகிறது. Endometriosis எனப்படுவது கருப்பை மேலிழையம் கருப்பை தவிர்ந்த வேறு அருகாமை அங்கங்களில் வளர ஆரம்பிப்பதால் உருவாகின்றது. உதாரணமாக சூலகம்,பலோப்பியன் குழாய்கள் மற்றும் குடற்பகுதியில் வளர்ந்து கடுமையான வயிற்று வலியையும் கூடுதல் உதிரப் போக்கையும் உடலுறவின் போது கடுமையான வலியையும் தருகிறது.

5. பெல்விக் இன்ஃப்லம்மட்ரி டிசீஸ் (Pelvic Inflammatory Disease - PID) எனப்படும் இடுப்பு அழற்சி நோய். இது பெண்களின் இனப்பெருக்கத் தொகுதியைப் பாதிக்கும் ஒரு பக்றீரியாத் தொற்று ஆகும். இந்த பாக்டீரியா தொற்று உடலுறவின் போதும், குழந்தைப் பிறப்பின் போதும், பெண்களுக்கு தொகுதியில் செய்யப்படும் சில பரீட்சார்த்த முறைகளாலும் (Gynechological procedures) பெண்களுக்கு ஏற்படுகிறது. இதன் அறிகுறிகளாவன துர்வாடையுடன் கூடுதலான வெள்ளைப்படுதல், கடுமையான வயிற்று வலி, மாதவிடாய் ஒழுங்கற்ற தன்மை, காய்ச்சல் குமட்டல் போன்றன.

6. PCOD என அழைக்கப்படும் பொலிசிஸ்டிக் ஓவரியன் சிண்ட்ரோம் Polycystic Ovarian Syndrome - (சினைப்பை சுரப்புக் கட்டிகளுடனான நோய்க்குறி) சிறு தண்ணீர் கட்டிகள் போன்ற சுரப்புகளை கொண்ட முடிச்சுகள் சூலகத்தில் உருவாகுதல் இதன் இயல்பாகும். இந்த சுரப்பு பொதுவாக ஆண்களுக்குரிய ஓமோனை கொண்டிருக்கும். சாதாரண மான கருமுட்டை வெளியாதல் இந்த நோயில் இடம் பெறாது. இதனால் பிள்ளைப் பேறு சாத்தியப்பாடு குறைவாக காணப்படும்.அத்தோடு மாதவிடாய் சிக்கல்களும் ஏற்படும். முகத்தில் பருக்கள், மற்றும் அசாதாரண மான முடி வளர்தல் இந்த நோயின் அறிகுறிகள் ஆகும்.

7. Premature Uterine Insufficiency (கருப்பை முதிராத நிலை)

இது 40 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு ஏற்படுகிறது. இந்த நோயில் கருமுட்டை வெளியாதல் தடைப்படும். இதனால் குறிப்பிட்ட காலத்துக்கு முந்தைய மாதவிடாய் நிறுத்தம் ஏற்படும். இந்த நோயானது பரம்பரை ரீதியாக கடத்தப்படுகிறது.

மாதவிடாய் சிக்கலுக்குரிய ஏனைய அசாதாரணமான காரணங்கள்

1. கருப்பை புற்றுநோய் மற்றும் கருப்பைக் கழுத்து புற்றுநோய்
2. ரத்தப் போக்கைக் ஊட்டக்கூடிய மருந்து பாவனைகள்
3. கபச் சுரப்பி, தைராய்டு சுரப்பி நோய்கள்.
4. Bleeding Disorders - உதிரப் போக்கு நோய்கள்
5. கருச்சிதைவு (Miscarriage)/ பலோப்பியன் குழாயில் கருத் தங்கல் (Ectopic Pregnancy)

Diagnosis-நோய் கண்டறிதல்

1. இரத்தப்பரிசோதனை-உதிரப் போக்கினால் ஏற்படும் இரத்தச் சோகையை கண்டறிவதற்கு
2. அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்-சூலகம் பலோப்பியன் குழாய் கருப்பை போன்றவற்றின் தன்மையை அறிவதற்கும் மற்றும் பொலிப்ஸ், பய்ப்ரொய்ட்ஸ், பிசிஓடி போன்றவற்றைக் கண்டறிவதற்கும்
3. Vaginal Cultures - யோனியில் ஏற்படும் தொற்றை கண்டு பிடிப்பதற்கு
4. Endometrial biopsy-கருப்பையில் பயாப்ஸிஎனப்படும்பரிசோதனை செய்து நுணுக்குக்காட்டியில் கண்டறிதல். குறிப்பாக எண்டோ மெட்ரியோசிஸ் எனப்படும் கருப்பைப் படல நோயை கண்டு பிடிப்பதற்கு உதவுகிறது.

மாதவிடாய் சிக்கலுக்கான தீர்வும் குணப்படுத்தலும் காரணங் களை கண்டறிந்து அதற்குரிய வகையில் நிவாரணத்தை பெற்றுக் கொள்ளலாம்.

1. மாதவிடாய்ச் சக்கரத்தை ஒழுங்கு படுத்துவதற்கும் கூடுதலான உதிரப்போக்கை கட்டுப் படுத்துவதற்கும் புரோஜஸ்டரோனே, ஈஸ்ட்ரஜன் மாத்திரைகள் பயன்படுத்தப் படுகின்றன.
2. வலியை கட்டுப்படுத்துவதற்கு வலிநிவாரண மாத்திரைகள் (Mefenamic acid) உதவுகின்றன. ஆஸ்பிரின் மாத்திரைகளை தவிர்த்துக் கொள்ளுதல் நல்லது. ஏனெனில் கூடுதலான உதிரப்போக்கை இது ஏற்படுத்தக் கூடியது. மற்றும் அடிவயிற்றில் சூடான துணி அல்லது திரவத்தை வைத்து அழுத்துதலும் வலிக்கான சிறு நிவாரணத்தை தருகிறது.
3. Fibroids கட்டிகளுக்கு நிவாரணமாக மருத்துவ நிபுணரால் முதலில் ஓமோன் மாத்திரைகளும் வலிநிவாரண மாத்திரைகளும் கூடுதலான உதிரப்போக்கை தடுக்கக்கூடிய மாத்திரைகளும் பரிந்துரைக்கப்படுகின்றன. இதற்கும் கட்டுப்படாமல் மாதவிடாய் சிக்கல்கள் தொடரும் போது சத்திர சிகிச்சை மேற் கொள்ளப்படுகிறது.
4. Endometriosis எனப்படும் கருப்பை படல நோய்க்கும் வலி நிவாரண மாத்திரைகளும் ஓமோன் மாத்திரைகளும் மகப்பேற்று மருத்துவ நிபுணர்களால் பரிந்து ரைக்கப் படுகின்றன. ஆனாலும் சிக்கல்கள் தொடரும் பட்சத்தில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப் பட்டு இந்தப் படலம் அகற்றப் படுகிறது.
5. கூடுதலான உதிரப்போக்கை கட்டுப்படுத்துவதற்கு பொதுவாக Mirena Coil எனப்படும் கருப்பை உள்ளக சுருள் (IUCD) கருப்பைக்குள் வைக்கப்படுகிறது. இது சுமார் ஐந்து வருடங்கள் கூடிய உதிரப் போக்குக்கான பாதுகாப்பைத் தரும்.
6. Endometrial Ablation எனப்படும் முறையாலும் கருப்பை மேலணி இழையம் ஒரு வகையான வெப்ப மருத்துவம் மூலம் நிவாரணம் ஏற்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த முறையில் பக்க விளைவு உருவாவதால் இதை மகப்பேற்று மருத்துவ நிபுணர்கள் குறைவாகவே பரிந்துரைக்

கிறார்கள்

மாதவிடாய் சிக்கல்களை தடுப்பதற்கும் குறைப்பதற்கும் எவ்வாறான செயல்களை மேற்கொள்ளலாம்? (To reduce the risk)

1. ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளை கடைப்பிடித்தல் - ஆரோக்கியமான உணவு உண்ணுதல், துரித உணவுகளைத் தவிர்த்தல், உடல் பருமனைக் குறைத்தல் போன்றன.
2. ஆறுதலான வாழ்க்கை முறை (Stress reduction and Relaxation Techniques)
3. போதியளவு ஓய்வைப் பெற்றுக் கொள்ளுதல்
4. வைத்திய ஆலோசனையின் படி மருந்து மாத்திரைகளை பெற்றுக் கொள்ளல்.
5. மகப்பேற்று மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளின் படி நடத்தல்
6. தேவையில்லாத தொற்றுக்களை தவிர்ப்பதற்கு மாதவிடாய் நேரத்தில் நான்கு மணித்தி யாலத்திற்கு ஒரு முறையாவது சானிட்டரி நாப்கின்களை மாற்றிக் கொள்ளுதல்.
7. தொடர்ச்சியான ஒரு ஒழுங்கு முறைப்படி மருத்துவ ஆலோசனைகளை பெறுதல். (Regular Checkups)

பெண்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் கண்கள் போன்றவர்கள்.அவ்வாறான பெண்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை வழங்குவதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

# வாழ்வியல் கூர்மை

சிதறாத வாழ்வியலின் கூர்மை
துள்ளியெழும் சொற்களுக்குள் இளமை
துவளாதப் பொருளிருக்கும் வளமை
நெஞ்சினிக்கும் நிகழ்வுகளில் புதுமை
நினைவிருக்கும் எந்நாளும் பெருமை
கொஞ்சும் மொழியாளுகின்ற திறமை
குவலயத்தின் கோபுரமாய் தாய்மை
மனிதநேயம் வளர்த்தெடுக்கும் கடமை
மண்மீது தழைத்தோங்கும் பெண்மை
முடியாளும் பெருமையிலே கருமை
முன்னெடுக்கும் மாந்தரின் முதுமை
கனிவான பேச்சாலே தனிமை
இனியோடும் என்பதே உண்மை
உவமையோடு உலாவரும் புலமை
ஒப்பற்றத் தமிழரின் உடமை
தொடர்ந்துவரும் பொல்லாத வறுமை
துரத்திடவே துணிந்தெழும் வலிமை
நாடெங்கும் நற்பயிராய் நன்மை
நனிசிறக்க களைந்திடுவோம் தீமை
திறன்மிகு செயலாலே உண்மை
தென்றலென நமையாளும் குளுமை
கள்ளமனம் கொண்டாடும் சிறுமை
காலத்தால் நிலைக்காத வெறுமை
சிந்தித்துச் செயலாற்றும் ஆண்மை
சிதறாத வாழ்வியலின் கூர்மை

**கா.ந.கல்யாணசுந்தரம்**

# பறக்கிறாய்

குழந்தை மனதில்
ஆசையை கூட்டி விட்டு
கையில் பிடிக்கும் நேரம்
பறந்து விடும் பட்டாம்பூச்சியாய்

என் நெஞ்சில்
காதல் ஆசையை தூவிவிட்டு
சிறையெடுக்கும் நேரம்
சிட்டாய் பறந்துவிடுகிறாய் நீ

**-ச. இராஜ்குமார்**
திருப்பத்தூர்

## பிழைக்கின்ற கனவு....

காருண்யம் கருந்திரைக்குள்
கண்ணயரும் நேரம்
மக்களிவர் மனமெங்கும்
கசப்புணர்வின் பாரம்

எனக்குள்ளே மலையளவு
இவர் திருத்திட நினைவு
பண்பானதொரு சமுதாயம்
என் இலட்சியக் கனவு

சுற்றியிங்கு திரிந்திடும்
வாலிபர்கள் நோக்கினேன்
பற்றியவர் கரங்களை
நறுஞ்சொற்கள் அடுக்கினேன்

விழிகளை மூடியே
வாழும் வழிகளின்
உன்னதம் துளிகளாய்த்
தூவினேன்

நிலையில்லாக் குவலயம்
நிகழ்த்துமொரு போர்க்களம்
பிழைகளை உணருவீர்
தலை தாழ்த்தியே மேவினேன்

நல்வினை விதைத்திட
நற்போதனை உரைத்திட்டேன்

விழி திறந்து பார்க்கிறேன்
காட்சிகள் மாயமே...

சீர்திருத்தம் விரும்பினேன்
ஆசையும் பிழைத்தது...
நிலைகுலைந்து தவிக்கிறேன்
சிந்தையும் சிரித்தது.

**மக்கொனையூராள்**

- குலதெய்வம் கோவில் திருவிழா
மாலையுடன் ஆடுகள்
எமனை எதிர்பார்த்தபடி.

- வெயிலில் காய்கிறோம்
ஆட்சியர் அலுவலக முன்
காலி குடங்கள்.

## மண்வீடு

மண் வீட்டில் பலமில்லை
மனத்தில் உறுதியுண்டு
மகிழ்ச்சி உண்டாகும்

கடற்கரை ஓரம்
நாளைக்கு நிச்சயம் திறக்கும்
சொர்க்க வாசல்

கலைஞர்கள் பிறப்பதில்லை
உருவாக்கபடுகிறார்கள்
விளையாட்டு ஆரம்பம்
நாளை விஸ்வரூபம்

அஸ்திவாரம் ஆழமாக எடுத்தல்
கட்டிடம் பலமாக அமைத்தல்
அடிப்படைவிதி

தேவதைக்காக
தேசிங்கு ராஜா
கோட்டை வாயிலில்
குதிரையுடன் காத்திருப்பு

**எஸ் வீ ராகவன்**
சென்னை

# உதிர்ந்திடும் பூக்களில்

என்ன உண்டோ?
இதழோடு இதழாக
அள்ளியெடுத்து  சேர்க்கிறாய்
இதழாக நானிருக்க
ஆசைப்பட்டேன்
வரமொன்றுகொடுப்பாயா?

மேகத்தில் ஊர்ந்திடும்
வெண்ணிலவே
இரவுகள் மட்டும்
சிரிக்கின்றன
அப்பிய இருளில்
அசைந்தாடுகிறாய் நீ...!

நின்முகம் பார்த்திட
குளமொன்று ஏங்கிட
தொட்டணைத்து அசைகிறாய்
இரவெல்லாம் பூக்கிறதே
குளமெல்லாம்குலுங்கியதே....!

ஏதேதோ செய்கிறாய்....!
என்முன்னே நகர்கிறாய்
பனிவிழும் பொழுதினில்
குழி விழும் கண்ணத்தில்
குட்டிக் குட்டிப் புன்னகையில்
விழச்செய்கிறாய்
மதியற்று  நனைகிறேன்....!

ஆடைகட்டிய பூவும்
விழத்தொடங்கியதே
அசைந்திடும் காற்றில்
இதழ்களை உதிர்க்கிறதே
மெல்ல வாய்திறந்து
உன்னோடு பேசிடவே....!

தரையினில் வீழ்ந்து
மணங்களை உதிர்த்து
மெல்லுடலை
ரணமாக்கிய பூவிதழ்கள்
சென்றடைகிறதே
நின் பாதம்...

பாதம்தொட்ட மலர்கள்
கேசத்தில் ஒதுங்கி
கருங்குழல் கூந்தலை
மயக்கியதே..
மயங்கும் வண்டினமும்
குதிக்கிறதே தேனுண்டு...!

வார்த்தையில்
சொல்லாமல்
கண்ணிமைத்து
விழிமூடிய கயல்விழியே....!
நின் கை பிடித்து
நான் நடக்கும்
கடைவீதியும்
கனவினில் தான்
அறங்கேறியதே...!

விழி நனைத்து
நடக்கிறேன்
விழிகொடுத்து
உயிர்த்தெழுவாய்
வழிதிறந்து ஒளியிடு
நெஞ்சத்தில் தங்கிடு...!
திறக்கட்டும் ஒலியெழுப்பி
இதயக்கோயில்கள்...!

**ஞா. முனிராஜ்**
அருப்புக்கோட்டை

# சன்மானமாய் தருகிறேன்

உன் முடிவைச் சொல்கிறாய்
நான் பதிலளிக்கத்
தாமதிக்கும் போதே
உனக்குத் தெரிந்திருக்க
வேண்டாமா?
உன் முடிவில் எனக்கு
விருப்பமில்லை என்று...!

பட்டம் வாங்குகிறான்
எட்டு வயது சிறுவன்
பெட்டிக் கடையில்.

காற்றைப் போல்
மூலை முடுக்கெல்லாம்
மறுப்பின்றி இயல்பாகப்
பொருந்திக் கொள்ளக்
கூடியவன் நான்.

பூக்களை நேசிப்பவர்கள்
பட்டாம்பூச்சிகளுக்கும்
ரசிகர்களாகவே
இருக்கிறார்கள்.

நானுன்னைக் காணும் நேரம்
வெட்கத்தில் கண்ணும்
மண்ணும்
ஒருசேர காதலில் திளைக்கும்.

என்னவள் செய்யும்
குறும்புச் சேட்டைகள் யாவும்
என் கவிதைகளுக்கு அறுசுவை
விருந்து.

வேகத்தோடு
பரிமாறிய காதலை அதே
வேகத்தில் பருகுவது
பேரின்பம்.

வார்த்தைகளில் சொல்ல
எச்சில் பட்டிடும்.
விழிகளில் சொல்ல
தடம் மாறிடும்.
எழுதிச் சொல்ல
பிழையாகிடும்.
பேசாமல் மௌனத்தால்
மொழி பெயர்த்திடு.
சேதாரமின்றி
என்னை மொத்தமாய்
சேர்ந்திடும் காதல்...!

பார்வையால்
பரிமாறும் காதலை
என் தாகம் தீரும் மட்டும்
பருகிக் கொண்டிருக்கிறேன்.
இடையிடையில்
கண்களைச் சிமிட்டாதே...!

காதல் கொண்ட விழிகள்
காண்போரை
விபத்துக்குள்ளாக்குமெனும்
கூற்று சற்று முன்னர்
உன்னைக் கண்டதும்
நிரூபணமானது எனக்கு.

தனக்குள்
தேனை வைத்திருக்கும்
பூக்களைப் போல்
அனைத்து ஜீவராசிகளிடமும்
நிறைந்திருக்கிறது
புனிதம் கெடாத அன்பு.

அவள் ஆசையாய்
பரிமாற்றிய காதல்
பார்வைக்குச் சன்மானமாய்
என்னையே தருகிறேன் நான்.

காதலைப் போற்றும் வரை
புனிதத்தை இழப்பதில்லை
மௌனங்கள்.

விழிகளுக்கு
வார்த்தைகளை வார்த்து
விட்டாய்
அது காதலாய்ப் பூத்திருக்கிறது.
மௌனங்களில்
சம்மதித்து விட்டாய்.
உதடுகளில் உரக்கச் சொல்
என்மீதுள்ள
மெய்மொழிக் காதலை...!

நான் மலர்க் கொத்துக்களை
எந்தி வருவதற்காகவே
ஆளற்ற வீதியாய்
வெறிச்சோடிக் கிடக்கிறது
என்னவளின் கார்கூந்தல்.

என்னவளின் உதடுகளில்
உதிர்ந்த முத்துக்கள்
எனது அன்றைய
கவிதைகளுக்குப் படிமங்கள்.

பெருந் திரளான
கூட்டத்திலும் என்னை மட்டும்
தனிமைப் படுத்தி
அணைக்கிறது
என்னவளின் விழிகள்.

நான் கறந்தபால்
காய்ச்சித் தயிராக்குவதும்
நெய்யெடுப்பதும் உன்பாடு.

நான் செய்வதை எல்லாம்
மிகச் சரியாய்ச் செய்கிறது
நிலைக்கண்ணாடியில் என்
பிம்பம்.

விதைகளைத் தெரியாமல்
தொலைக்கவில்லை
தெரிந்தேதான் தவறவிட்டேன்
அடுத்து வருவது மழைக்காலம்.

ஒற்றைத் தும்மல
அதுவரைக் காத்திருந்த
மௌனம் கலைந்தது.

அலுங்காமல் குலுங்காமல்
நிறைகுடமென மௌனத்தை
எடுத்துப் போகிறேன்.
வலியின்றியும் வடுவின்றியும்
பூவில் கள்ளுண்ணும்
வண்டாய்
என்னில் விபத்தொன்றை
நிகழ்த்திப் போகிறது
அவளது விழிகள்.

முதுகு கேள்விக்குறியாய்
வளைந்தது.
யாரையும் வணங்குவதற்கல்ல
உழைப்பதற்கு!


இன்னும் கொஞ்சநேரம்
கொஞ்சதூரம் தான்
என் கால்களில் மிதிபடும்
சிகரம்.

**பாரியன்பன் நாகராஜன்**
குடியாத்தம் - 632602

# றோணியோக்களின் வளர்ச்சி 01

எஸ் யூ. கமர்ஜான் பீபீ.(J.p)
ஹுனுப்பிட்டிய, வத்தளை

அன்று றோணியோக்களே பேசும் பொருளாக இலக்கிய. உலகம் இருந்துள்ளது. காலத்தோடு கலந்து காத்திரமான கனதியான படைப்புகளை தந்துள்ளது. அச்சுப் பத்திரிகைகள் போலல்லாது எண்ணற்ற சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. அந்த சிரமங்களுக்கு மத்தியிலேயே இலக்கியமும் வளர்ந்ததெனலாம்.



இன்றைய ஆய்வுக்கு கிட்டிய சொத்து புன்னகை. இன்று உங்களனை வரையும் பார்த்து புன்னகைக்கிறது புன்னகை...

1986 காலப்பகுதியில் காலாண்டு இதழாக பல இதழ்களை மிகவும் கஸ்டத்தின் மத்தியில் மலர செய்துள்ளது. இதன் ஆசிரியர் எம்.ஐ.உஸனார் ஸலீம். இணையாசிரியர்கள் செல்வி ஃபாரா தாகிர் .மாவனல்லை. செல்வி சித்ரா எட்வர்ட். கொலன்னாவ. இதன் முகவரி புன்னகை, 42 யூ. எஸ்.லேன் நிந்தவூர் -1 (கிமா). "சோகங்களே இன்று என் ராகங்கள்" என்ற கோஷங்களோடு அழகான முத்தானகை எழுத்தை தாங்கி வந்துள்ளது.

இதழில் எழுதியவர்கள் பெயர் பட்டியல் நீண்டுள்ளதால் அத்தனை பெயர்களையும் தரமுடியாமைக்கு வருந்து கிறேன்.

நிறைய எழுத்தாளர்களின் படைப்புக்கள் கவிதை, சிறுகதை, கட்டுரை, துணுக்குகள், பேட்டி, வாசகர் கருத்தரங்கம், சிந்தனைச்செல்வம் போன்றவைகள் இதற்குள் அடங்கியுள்ளது.

உண்மையில் புன்னகை சஞ்சிகை அழகான வடிவமைப்பில் இருந்தாலும் அச்சில் வெளிவந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

மீண்டும்இன்னுமொருறோணியோவுடன் சந்திப்போம்.

---

## 1.உண்மையில் யார்

எளிதாக கடந்து
விடுகிறார் சாலையை
யாரேனும் உதவி
செய்வார்கள்
சாலையைக் கடக்க
என்று ஏக்கத்தோடு
காத்துக் நிற்கும்
குருடரை கண்டுக்
கொள்ளாமல்..
கண்ணிருந்தும் குருடராய்.

## 2. ஏக்கம்

சாலையோரம் வீசப்பட்டதும்
ஏக்கத்தோடு பார்க்கிறது
ஜோடி இழந்த
ஒற்றைச் செருப்பு

**கவிப்ரியா**

# முகப்பை அலங்கரிக்கும் முகங்கள்

## கவியருவி சாரதா சந்தோஷ்

கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர், பல தமிழ்க் குழுக்களில், தளங்களில் நிர்வாகி, தொகுப்பாசிரியர், இலக்கிய



நிகழ்ச்சித் தொகுப்பாளர் , கவியரங்கத் தலைமை, உலகளாவிய கவிஞர்கள் ஒருங்கிணைப்பாளர், போட்டி நடுவர், பத்திரிகையாளர், மின்னிதழ் இணை ஆசிரியர்..

நிறை இலக்கிய வட்டத்தில் செயல் உறுப்பினராக,புனேநமஸ்தேஇந்தியா மின்னிதழில் இந்திய ஆலோசகராக, புதிய திசைகள் இணைய தளத்தில் இணை ஆசிரியராக, திசைகள் வானொலியில் நிலைய இயக்குனராக இரண்டு வருடங்கள், உலகத் தமிழ் ஹைக்கூ மன்றத்தில் நிர்வாகியாக, தன்முனைக் கவிதைகள் குழுமத்தில் நிர்வாகியாக, ஹைக்கூ படர் பார்வை. ஒரு கவிஞனின் கனவு குழுமங்களின் நிர்வாகியாகியென பல்வேறு தமிழ் அமைப்புகளில் முக்கியப் பொறுப்புகளை வகிக்கிறார்.

தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை மற்றும் பொது நூலக இயக்ககம் இணைந்து வழங்கிய சிறந்த எழுத்தாளருக்கான விருது, கல்லிடைக்குறிச்சி தேசிய கல்வி அறக்கட்டளை வாயிலாக சர்வதேச பெண் சாதனையாளர் பன்முகக் கலைஞர் விருது (2021) மித்ரா துளிப்பா விருது, நிறை முத்து விருது, துளிப்பா இளவரசி விருது, சர்வதேச பெண் சாதனையாளர் விருது, கவியருவி விருது, NFED வழங்கிய International Women Achiever விருது உட்பட முப்பதுக்கும் மேற்பட்ட விருதுகள் பெற்றுள்ளார்.

வெளியிட்ட நூல்கள் ஒரு துளி கடல் (புதுக்கவிதை) மின் கம்பியில் குருவிகள் (ஹைக்கூ வகைமை) மற்றும் தொகுப்பாசிரியராக தமிழே எங்கள் தலைமை (2021) (பன்னாட்டுக் கவியரங்கக் கவிதைகள் தொகுப்பு நூல்) என்பனவாகும்.

## எஸ்.யூ. கமர்ஜான் பீபீ

வத்தளை ஹுனுப்பட்டியை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்.யூ.கமர்ஜான்பீபீ இலக்கிய உலகில் பேசப்படும் ஓர் ஆளுமைமிக்கவர். கடந்த 1988 களில் சபதம், மருதம் ஆகிய இரு இலக்கிய சஞ்சிகைகளில்



ஆசிரியராகவிருந்தும் இலக்கியப்பணி புரிந்த இவர், தனது ஊரிலிருந்து முதல் பெண் சமாதான நீதிபதியாகவும் திகழ்கின்றவர். ஹுனுப்பிட்டிய இலக் கிய வட்டம், பழைய மாணவ சங்கம், ஐக்கிய முஸ்லிம் மாதர் ஒன்றியம் ஆகியவற்றின் செயலாளராக கடமை யாற்றும் இவர் பயிற்றப் பட்ட பாலர் பாடசாலை ஆசிரியருமாவார். அஹதியா பாடசாலையின் அதிபராக வும் செயற்பட்டுள்ளார். உளவளத் துணை யாளராகவும் இயங்கி வருகின்றார்.

இலத்திரனியல், அச்சு, சமூக வலைத் தளங்கள் என்ற மூன்று கால மாற்ற ஊடக வளர்ச்சியிலும் இவரின் பங்களிப்புண்டு. கவிதைத் துறை மட்டுமல்லாமல் சிறுகதை, கட்டுரை, நாடகம், விவாதம், வில்லுப்பாட்டு (இஸ்லாமிய வரலாறுகளில்) பாடல் கள் சித்திரம் போன்ற துறைகளில் பிரகாசிப்பவர். மாவட்ட ரீதியில் சித்திரப் போட்டி யிலும் பேச்சுப் போட்டி, பாடல் போட்டிகளிலும் பங்கு பற்றி பரிசு களைப் பெற்றுள்ளார்.

சமூக சேவைகளில் தீவிரமாக ஈடுபடு பவர். பழைய மாணவர் சங்கத்தை 1986 இவரே ஆரம்பித்து செயலாள ராக இருந்து சங்கத்தால் நிறைய சேவைகள் செய்து வருகிறார். ஹுனுப்பிட்டிய இலக்கிய மன்றத்தை ஆரம்பித்து இணை செயலாளராகவும் சேவை புரியுமிவர், களனி பிரதேச சபை யில் கலாக்கரு கலை இலக்கிய வட்டத்திலும் அங்கம் வகிக்கிறார்.

2017 ல் "நான் மூச்சயர்ந்தபோது" என்னும் கவிதை நூலை வெளியிட்ட கமர்ஜான் பீபீ தன் இரண்டாவது புத்தக வெளியீட்டிற்கான ஆயத்தங் களில் ஈடுபட்டுள்ளார்.

## கவிதாயினி மணிக்கூ கவி நஸீரா எஸ் ஆப்தீன்

மணிக்கூ கவி நஸீரா எஸ் ஆப்தீன் ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சுமார் 17 வருடங்கள் ஆசிரியராகவும், 20 வருடங்கள் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமை புரிந்து தனது 55 ஆவது வயதில் ஓய்வு பெற்றவர்.

அரச பணி ஓய்வின் பின், 2018 ஆம் ஆண்டிலே இலக்கியத் துறையில் காலடி வைத்த இவர், இக்குறுகிய காலப்பகுதியில் பல இலக்கிய வெளிப்பாடுகளைக் காட்டியுள்ளார். «ஹைக்கூ வில் கரைவோமா?» என்ற ஹைக்கூ ஆய்வு நூலையும்(2020 பெப்ரவரி) ''வானும் மண்ணும் நம் வசமே..'' என்ற இலங்கையின் முதலாவது தன்முனைக் கவிதைகள்



நூலையும் (2020 ஆகஸ்ட்) "புத்தொளிக் கவிதைகள்" என்ற உலகக் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூலையும் (ஒக்டோபர் 2021) ''பாரதிக்கு பதில் மடல்" என்ற கவிதைத் தொகுப்பையும் (டிசம்பர் - 2021) வெளியிட்டுள்ளார்.

திரிபடைந்த ஹைக்கூ வடிவங்களை சார்ந்ததாகவிடுகவிக்கூ, மணிக்கூ என்ற இரு புதிய ஹைக்கூ வடிவங்களையும் புத்தொளிக் கவிதைகள், கூம்புக் கவிதைகள் ஆகிய புதிய கவிதை வடிவங்களையும் இவர் கவியுலகுக்கு அறிமுகப் படுத்தியுள்ளார்.

கல்வித்துறையில் சாமஸ்ரீ வித்தியா ஜோதி, கல்விச்சுடர் போன்ற விருது களையும், இலக்கியத் துறையில் பட்டுக் கோட்டை கண்ணதாசன் விருது, பேரறிஞர் அண்ணாவிருது, கவி அலரி விருது, மணிக்கூ கவி விருது, சந்தப்பாமணி விருது, இசைக்கவி விருது, கவி மின்னல் விருது போன்ற பல விருதுகளைப் பெற்றவர்.

புத்தொளி கலை இலக்கிய பண் பாட்டுக் குழுமம் என்ற குழுமத்தை முகநூலில் தொடங்கி பல்வேறு வகையான கவிதைப் போட்டிகளை நடாத்தி வருகின்றமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

## சித்தி மஷூறா சுஹூறுத்தீன்

சம்மாந்துறையைப் பிறப்பிடமாகவும் தற்போது மருதமுனையை வசிப்பி டமாகவும் கொண்டவர். இவர் 1979 ல் மஷூறா ஏ மஜீத் என்ற பெயரில் எழுதவாரம்பித்தார்.

கவிதை,சிறுகதை , கட்டுரை, நாடகம், பாடல், வில்லுப்பாடல், தாளலயம் பேச்சு, சித்திரம், கைப்பணி, சஞ்சிகை என பல்துறைகளிலும் கைதேர்ந் தவராவார்.

மாவடிப்பள்ளி கமு அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக பணி புரியும் இவர், மொழித் தேர்ச்சியி லும் படைப்பாக்கத்திறனிலும் மாணவர் களை சிறந்த அடைவைப் பெறச் செய்தவர்.

2017ல் கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கிய ''கலைஞர் சுவதம்'' விருது உட்பட இலக்கியத் திற்காக பதின்மூன்று விருதுகள் பெற்றிருக்கிறார். கடந்த வருடம் (2021) 'நதிகளின் தேசியகீதம்' எனும் இவரது சுயகவிதைத் தொகுதியும் வெளிவந்துள்ளது.தவிரவும், அறுபத்து மூன்று முஸ்லீம் பெண்களின் கவிதை களைத் தொகுத்து, "சுட்டுவிரல்" எனும் கவிதைத் தொகுதியையும் வெளியிட்டி



ருக்கிறார். இதுவே இலங்கையில் முஸ்லீம் பெண்களின் முதலாவது கவிதைத் தொகுதியுமாகும். அச்சு, றோணியோ, கையெழுத்து என முப்பதுக்கு மேற்பட்ட சஞ்சிகைகளை வெளியிட்டிருக்கிறார். கையெழுத்தாக ஆரம்பித்து றோணியோவில் முடிவுற்ற 'நிறைமதி' சஞ்சிகை எண்பது காலப் பகுதிகளில் தேசியமட்டத்தில் வெளியிடப்பட்டதாகும். காலாண்டு சஞ்சிகையான "நிறைமதி" இருபத்தி இரண்டு இதழ்களை வெளியிட்டிருந்தது.

தனது மாணாக்கர்களின் கவிதை களைத் தொகுத்து இரண்டு தொகுதி கள் றோணியோவில் வெளியிட்டி ருக்கிறார். மாணவர்களை வழிநடத்தி வெளியிடப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைகள் நான்கு தடவைகள் மாகாணமட்டத்தில் வெற்றியீட்டி யிருக்கின்றன.

பாடலாக்கம், கவிதை, சிறுகதை, நாடகத் தயாரிப்பு என தேசிய மட்டத்தில் பல வெற்றிகளைப் பெற்றுள்ளார். இவரது பன்னிரெண்டு நாடகங்கள் மாவட்டம், மாகாணம், தேசியமட்டம் என்ற ரீதியிலும், தேசிய மட்டத்தில் மூன்று நாடகங்கள்(பள்ளி) எனவும் வெற்றியீட்டியுள்ளன. தேசிய மட்டத்தில் நாடகத் தயாரிப்பிற்கான விருதும் பெற்றுள்ளார். பல்வேறு இலக்கிய அமைப்புகளில் அங்கம் வகித்து பணியாற்றி வரும் இவர் 2021 ல் Sri Lanka pen club என்ற பெண் எழுத்தாளர் அமைப்பொன்றினை நிறுவி ஆற்றலுள்ள பெண்களுக்கு களம் அமைத்துத்தரும் பணியில் ஈடுபட்டிருக்கிறார். அதன் முதற்கட்ட முயற்சியாகவே கடந்த 2021.01.18ம் தேதி தேசிய ரீதியிலான பெண் எழுத்தாளர் மாநாடு ஒன்றினை நடாத்தி 'சுட்டு விரல்' பெண்களின் கவிதைத்தொகுதி வெளியிடப்பட்டது.

அகில இலங்கை சமாதான நீதி வானுமான இவர், 2021 ம்ஆண்டின் இலக்கிய வித்தகர் விருதிற்குத் தெரிவாகியுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

## அன்புச்செல்வி சுப்புராஜூ

அன்புச்செல்வி சுப்புராஜூ. தமிழ் நாட்டில் உள்ள தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் பிறந்தவர். தன் முனைக்கவிதை படைப்பாளர்கள் பேரவையின் செயலாளராகவும் மற்றும் அன்பின் சங்கமம் சிறுவர் உலகத்தின் நிறுவனராகவும்



உள்ளார். ஆடையலங்காரம் மற்றும் வடிவமைப்பு படித்துள்ளார்.

இவர் உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர் கள் மன்றத்தின் நிர்வாகியாக ஹைக்கூ உலகிலும், தன்முனைக் கவிதை குழும நிர்வாகியாக தன்முனைக்கவிதை உலகிலும் பயணித்து வருகிறார்.

பல குழுமங்கள், அமைப்புகளின் வழியாக கவி வேந்தர், அப்துல் கலாம் விருது, கவியருவி, கவிச்சாகரம், அமுதகவி, கவியமுது, கவி இமயம், கவிச்சூரியன், கவியரசி, பன்னாட்டு பெண்கள் அமைப்பு வழங்கிய "தேன்மொழி விருது" தமிழ்ப்பட்டறை

மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இணைந்து வழங்கிய கவிச்செம்மல், அம்மா தமிழ்ப்பீடம் வழங்கிய "பாவரசு", தென்னிந்தியக் கலை மற்றும் கலாச்சார மையம் வழங்கிய "கவிதைக்கலை வித்தகி" உள்ளிட்ட இன்னும் பல விருதுகளோடு கம்போடிய அரசுடன் இணைந்து அங்கோர்வாட் தமிழ்ச்சங்கம் அளித்த ''சர்வதேச பாரதியார் விருது'' பெற்றவர்.

ஏறக்குறைய பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களுக்கு இணை தொகுப்பாசிரியராக இருந்திருக்கிறார். இவரின் தனிப்பட்ட நூல்களாக மே 2017 ல் "அன்பின் கவிதைகள்'' (புதுக்கவிதை), ஏப்ரல் 2018 "நிலவோடு நான்" (குறுங்கவிதை), மே 2018 "துளிர்க்கும் மரம்" (ஹைக்கூ) என்பனவற்றோடு 2020 ல் வெளிவந்த "மகரந்தம் தூவும் மலர்கள்" (தன்முனைக் கவிதை முதல் பெண்கள் தொகுப்பு) பன்னாட்டுப் பெண்களின் தன்முனைக் கவிதைகள் இடம் பெற்றுள்ள முதல் பெண்கள் தொகுப்பு என்ற சிறப்பைப் பெற்றது.

பல பெண் கவிஞர்களின் கவிதைகளடங்கிய நூல் மார்ச் 8, 2021 பெண்கள் தினத்தன்று வெளியிடப்பட்ட"மலர்கள் தீட்டிய வரைவுகள்" (தன்முனைக் கவிதைகள்) "புக் ஆஃப் வேர்ல்ட் ரிக்கார்ட்"உலகசாதனை நூலாகும்.

ஏப்ரல் 2021 ''மகரந்தத்தின் தேடல்கள்'' (புதுக்கவிதை)

நவம்பர் 2021 "இமயம் தொடும் இயைபுகள்'' (தமிழில் பெண் படைப்பாளர்களின் முதல் லிமரைக்கூ தொகுப்பு நூல்)

டிசம்பர் 2021 ''குட்டி மேகங்கள் தூவிய தூறல்கள்'' (சிறுவர் கதைகள், தொகுப்பு நூல்)

டிசம்பர் 2021 ''வாண்டுகள் சொன்ன கதைகள்'' (சிறுவர் கதைகள், தொகுப்பு நூல்) வெளிவந்துள்ளன.

இவர் எழுதிய தன்முனைக் கவிதைகள் "லாந்தர் விளக்கின் வெளிச்ச சிதறல்கள்'' நூலாக அச்சிடப்பட்டு இவ்வாண்டின் முதல் நூலாக வெளிவந்துள்ளது. இன்னும் வெளிவரவுள்ள நூல்கள்...

"இங்காவின் ஆலாபனைகள்" (குழந்தைகள் குறித்தான முதல் தன்முனைக் கவிதை நூல்)

''நறுமுகை யாளிகள்'' (பெண்கள் சிறுகதைத் தொகுப்பு)

'அ' ~ அன்பின் அகராதி (அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் குழந்தைகள் எழுதிய தன்முனைக் கவிதைகள்) என்பனவாகும்.

## திருமதி . சரஸ்வதி பாஸ்கரன்

படிப்பு - வேதியியலில் முதுகலைப் பட்டம், கல்வியியலில் ஆய்வியல் நிறைஞர் பட்டம், உளவியல் மற்றும் ஆலோசகர் படிப்பில் முதுகலை பட்டையம். வாழிடம் - திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு. பணி - வேதியியல் துறை மற்றும் கல்வியியல் துறை சிறப்புப் பேராசிரியை.

மரபு நூல்களான காற்றினில் தெறித்த கனவுகள், மௌனத்தின் விலையென்ன, ஊஞ்சலாடும் உறவுகள் ஆகிய நூல்களை வெளி யிட்டுள்ளார் மேலும் இருபது நூல்களுக்குத் தொகுப்பாசிரி யருமாவார்.

.

பெற்ற விருதுகள் பைந்தமிழ்ப்



பாமணி, கவிச்சிகரம் கவிக்காவிரி, ஆளுமைச்செம்மல், கவிச்செம்மல், இசைக்கவி, கவி இமயம், கவிச்சோலை, நிலாக்கவிஞர், அமுதகவி, கவிநிலா, கவிமாமணி, கவிபாரதி, கவியாழினி, கவியருவி, கவிச்சாகரம், கவி வித்தகர, மதுரை உலகத் தமிழ்ச் சங்கத்தின் சங்கப் புலவர் விருது, கவிப்பேரொளி விருது, புரட்சிக் கவி, தமிழ்ச்செம்மல், தமிழ்மாமணி, வெண்பா வேந்தர், மரபு சுடரொளி, புரட்சிக்கவி, தங்கமகள் விருது. உலகத் தமிழ்ப் பண்பாட்டுச் சங்கம் சார்பில் தமிழ்த்துறை மற்றும் தொல்லியல்துறை அமைச்சர் அவர்கள் வழங்கிய தமிழ்ச்சேவைக்கான சாதனைச் சிகரம் விருது, பாவேந்தர். பாரதிதாசன் விருது இப்படிப் பல...

பள்ளி இறுதியாண்டு மாணவர்களுக்கு வேதியியல், கணிதம், இயற்பியல், ஆங்கில இலக்கணம், தமிழ் இலக் கணம் கற்பித்தல், உளவியல் ஆலோ சகர் மற்றும் வழிநடத்துனர். 8 முறை வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றுள்ளதிருமதி. சரஸ்வதி பாஸ்கரன் அவர்கள் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட விருதுகளைக் குவித்துள்ளார். கவிஞர் சரஸ்வதி பாஸ்கரன் அவர் களின் இடையறாத தமிழ்ப்பணி யைப் போற்றி அமெரிக்கா முத்தமிழ் பல்கலைக் கழகம் அவருக்கு மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மோகன் ஜெனிதா

மத்தியமுகாம்-2 நாவிதன்வெளியை பிறப்பிடமாகவும் நற்பிட்டிமுனை-2 கல்முனையை வசிப்பிடமாகவும் கொண்டிருக்கிறார். கிழக்கு பல்கலைக் கழகத்தில் சமூகவியல் சிறப்புக் கற்கையை மேற்கொண்டு முதல் வகுப்பில்சித்திபெற்றஇவர், ஒருவருடம் தற்காலிக உதவி விரிவுரையாளராகப் பணி புரிந்தார். கவிதை, கட்டுரைகளை பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளுக்கு எழுதி வருகிறார். வாழ்த்துப்பாக்கள் பலவும் எழுதியுள்ளார்.

2012-2018 ஆம் ஆண்டு வரை மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தராக நாவிதன்வெளி பிரதேச செயலகத் தில் கடமை புரிந்த இவர், அதனைத் தொடர்ந்து காரைதீவு பிரதேச செயலகத்தில் இன்று வரை கடமை புரிந்து வருகிறார்.

தற்போது கல்முனைநெட் பத்திரிகை யின் மங்கையர் பகுதிக்குரிய ஆசிரிய ராக இருக்கின்றார். 'சமூகவியல்' எனும் தலைப்பில் 13 கட்டுரை களின் தொகுப்பு அடங்கிய புத்தகம் ஒன்றை வெளியீடு செய்திருக்கிறார். பெண்களுக்கு எதி ரான வன்முறைகளும், அதற்கான தண்டனைகளும் அடங்கிய கையேடு கள் இரண்டினை வெளி யிட்டுள்ளார். மேலும் பட்டிமன்றங்கள், கவிரயங் குகளில் கலந்து




கொண்டு சிறப்பித்திருக்கிறார்.

சிறுவர்கள் துஷ்பிரயோகம், பெண் களுக்கு எதிரான வன்முறைகள், மது ஒழிப்பு, பெண்கள் உரிமைகள், தலைமைத்துவம், மனித உரிமைகள், நல்லிணக்கம், பால்நிலை சமத்துவம் போன்ற தலைப்புக்களில் வளவாளராக வும் பங்குபற்றிக் கொண்டி ருக்கின்றார்.

கல்முனை பிராந்திய மனித உரிமை குழு அங்கத்தவராகவும், வேள்வி அமைப்பின் செயலாளராகவும், அம்பாறை வலு விழப்புடன் கூடிய நபர்களுக்கான வலையமைப்பின் பொருளாளராகவும், அம்பாறை பெண்கள் வலையமைப்பின் செயலாளராகவும், முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயலணியின் சமூக நல்லிணக்க குழுவின் செயலாளராகவும், சமாதானமும் சமூகப்பணியும் நிறு வனத்தின் நல்லிணக்க குழுவின் உறுப்பினராகவும் செயற்படுவதுடன் பல்வேறு சமூகப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஜெனிதா பன்முக ஆளுமையுடையவர்.

## வெலிகம ரிம்ஸா முஹம்மத்



எழுத்தாளர், இதழாசிரியர், ஊடகவிய லாளர், கவிதாயினி என பன்முகத் திறமைகள் கொண்ட ஆளுமை மிக்கவர். ‘பூங்காவனம்’ எனும் கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் பிரதம ஆசிரியர். பலதரப்பட்ட ஆளுமைகளை பல ஊடகங்கள் மூலம் நேர்காணல் செய்தவர். ஊடகத்துறையில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்துள்ளார்.

இதுவரை பல இலக்கிய அமைப்புகள் மூலமாக சாமஸ்ரீ கலாபதி, சாதனைக் குரிய மகளிர், கவிச்சுடர், கலாபிமானி,கலைமதி,கவித்தாரகை போன்ற விருதுகளைப் பெற்றவர்.

அவர் வெளியிட்ட நூல்கள்

1. வங்கிக் கண்கிணக்கக் கூற்று (கணக்கீடு) 2004
2. கணக்கீட்டுச் சுருக்கம் (கணக்கீடு) 2008
3. கணக்கீட்டின் தெளிவு (கணக்கீடு) 2009
4. தென்றலின் வேகம் (கவிதை) 2010
5. ஆடம்பரக் கூடு (சிறுவர் கதை) 2012
6. என்ன கொடுப்போம் (சிறுவர் கதை) 2012
7. பாடல் கேட்ட குமார் (சிறுவர் கதை) 2013
8. இதுதான் சரியான வழி (சிறுவர் கதை) 2013
9. கவிதைகளுடனான கைகுலுக்கல் ஒரு பார்வை (விமர்சனம்) 2013
10. வண்ணாத்திப்பூச்சி (சிறுவர் பாடல்) 2014
11. அறுவடைகள் (விமர்சனம்) 2015
12. எரிந்த சிறகுகள் (கவிதை) 2015
13. விடியல் (ஆய்வு) 2017
14. எழுதாத பேனாவுக்கு எழுதிய சரித்திரம் (ஆவணம்) 2021

என்பனவாகும்.



## Dr ஜலீலா முஸம்மில் MBBS (SL)

இலங்கை நாட்டின் மீன்பாடும் தேனாடாம் மட்டக்களப்பு மாவட்டம், ஏறாவூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்டவர்.

கடந்த 14 வருடங்களாக வைத்திய அதிகாரியாக கடமை புரிந்து வருகிறார். மருத்துவக் கல்வியை கொழும்பு களனிப் பல்கலைக்கழகத்தின் றாகமை மருத்துவ பீடத்தில் கற்று முடித்தார். தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் கடமை புரிகிறார்.தேசிய இரத்தப் பரிமாற்ற சேவையில் ஐந்து வருடங்கள் கடமை புரிந்தவர்.

சிறீலங்கா பென் கிளப் எனும் இலங்கை நாட்டின் பெண் எழுத்தாளர்கள் அமைப்பில் அங்கத்துவம் வகிப்பதோடு, உபதலை வராகவும், ஶ்ரீலங்கா பென் கிளப் முகநூல், வட்சப் பக்கத்தில் மருத்துவப் பகுதிக்குப் பொறுப்பாளராகவும் இருக்கிறார். நம் முத்தமிழ் கலசம் இதழிலும், இவர் மருத்துவக் கட்டுரைத் தொடரை எழுதி வருவதும் குறிப்பிடத் தக்கது.

கட்டார் நாட்டிலிருந்து வெளிவரும் துணிந்தெழு சஞ்சிகையின் மட்டக் களப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளரா கவும் செயல்படும் இவர் கடந்த மாதம் 27 ஆம் திகதி தனது கன்னி நூலான 'சிறகு முளைத்த மீன்' எனும் நூலை சென்னையில் வெளி யிட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். எழுத்துலகில் இன்னும் வளர வேண்டும், சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் இவருக்குண்டு.

## முனைவர் நிர்மலா சிவராசசிங்கம்

இலங்கையைத் தாயகமாகக் கொண்ட இவர் தற்போது சுவிற்சலாந்தில் வாழ்ந்து வருகிறார். தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர். தமிழ்மணிப் புலவர் மரபுக்கவிதை தேர்வில் கிடைத்த பட்டம். பைந்தமிழ்ச் செம்மல், ஆசுகவி, சந்தக்கவிமணி போன்ற பல விருதுகள் பெற்றவர்.

இவர் எழுதி வெளியிட்ட நூல்கள்

1. எழில் மிகு பூக்கள்
2. உல்லாசப் பறவைகள்
3. அந்தமிழ் அறுபது (மரபு கவிதை)
4. எழில் விருத்தங்கள் (மரபு)
5. ஓடை நிலா (ஹைக்கூ)
6. சிந்துகவிச் சாரல் (சிந்து பாடல்கள்)

என்பனவாகும்.





# மரங்களிலேயே தனித்துவம் வாய்ந்த மரம்

மரணத்தின் ஆப்பிள் என்று அழைக்கப்படும் பழம் உலகின் மிக ஆபத்தான பழமாக கருதப்படுகிறது. இந்த மரத்தின் ஒவ்வொரு பகுதியும் விஷமானது. அது மட்டுமல்லாமல், மரத்தின் அடியில் நிற்பதும் உங்களுக்கு ஆபத்தானது.

வட அமெரிக்காவின் தென் பகுதியிலும், தென்அமெரிக்காவின் வட பகுதிகளிலும் காணப்படும் ஒரு வித்தியாச மான மரத்தின் அருகில் செல்பவர் களுக்கு மிகவும் கடுமையான எரிச்சலை ஏற்படுத்தும்

உண்மையில், புளோரிடா இன்ஸ்டிடியூட் ஆப் உணவு மற்றும் வேளாண் அறிவியல் மையத்தின் படி, மஞ்சினிலின் மரத்தின் ஒவ்வொரு பகுதியும் மிகவும் ஆபத்தானது. மிகவும் அடர்த்தியான மரத்திலிருந்து ஒரு வகையான பால் சாறு வெளியிடப் படுகிறது.

இந்த மரத்தின் இலைகளில் இருந்து வெளிவரும் பால் போன்ற திரவம் நம் உடலில் பட்டால், அலர்ஜி ஏற்பட்டு சிறிது நேரத்தில் காது, மூக்கில் இருந்து ரத்தம் வடியத் தொடங்கும். அதிகப்படியான ரத்தம் வெளியேறி மரணமும் நிகழக்கூடும். அதன் அருகே நிற்பவர்களுக்கு கண்பார்வைக் குறைபாடு ஏற்படுவது நிச்சயம் என்கிறார்கள் இப்பகுதியில் உள்ளவர்கள்..

மழைபெய்யும்போது,அதுதண்ணீர் சொட்டுகளுடன் வந்து உங்கள் சருமத்தில் கூர்மையான எரிச்சலை ஏற்படுத்தும். மஞ்சினீல் மரம் எரிக்கப்படுவதால் ஏற்பட்ட புகை மக்களின் கண்களில் வீக்கத்தை ஏற்ப டுத்தியது. மேலும் பலர் தற்காலிகமாக குருட்டுத்தன்மைக்கு ஆளான சம்பவங்கள் பல உள்ளன. இந்த பழத்தை சாப்பிட்டால், அது மிகவும் ஆபத்தானது. இந்த பழத்தை சாப்பிட்ட பிறகு, மனிதர்களுக்கு வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது, இது மனிதனின் மரணத்திற்கு வழிவகுக்கிறது.

இந்த மரம் மஞ்சினீல் மரம் என்றும் அழைக்கப்படுகிறது, ஆனால் இது தி பீச் ஆப்பிள், விஷ கொய்யா, தி ஆப்பிள் ஆஃப் டெத் என்றும் அழைக்கப்படுகிறது. ஸ்பானிஷ் மொழியில், இது ஆர்போல் டி லா மியூர்டே என்று அழைக்கப்படுகிறது, அதாவது மரண மரம் என்று பொருள்.

கின்னஸ் உலக சாதனைகளின் படி, மஞ்சினீல் மரம் உண்மையில் உலகின் மிக ஆபத்தான மரம். சிலர், ‘கடவுளின் சாபம் பெற்ற மரம்’ எனவும் கருதுகிறார்கள்

சதீஷ்குமார் இரா.

# பாச ஊஞ்சலின் ஆட்டம்

**உஷா ராமகிருஷ்ணன்**
சாலிகிராமம், சென்னை - 93

வெளியில் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. சாலையில் மட்டும் வெளிச்சப் புள்ளிகளாக அங்கங்கே தெரு விளக்குகள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. அக்கம் பக்க வீடுகளில் அவரவர் சீரியல் களில் ஆழ்ந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தனர். ஆண்களோ எப்போது விளம்பர இடைவேளை வரும், இரவு உணவு கிடைக்கும் என்று காத்திருந்தார்கள். அதனால் தெருவில் ஆள் நடமாட்டம் இல்லாதிருந்தது. ராஜம்மாள் மட்டும் தன் மகளை இன்னும் காணவில்லையே என்று பரிதவித்துக் கொண்டிருந்தாள்

வழக்கமாக இரவு எட்டு மணிக்குள் வீடு வந்து சேரும் தன் மகள் தான்யாவை எட்டு மணி வரை தான் எதிர்பார்க்காததுகூட தவறு தானோ என அவள் மனம் அவளைக் குத்திக் கிழித்துக் கொண்டிருந்தது. ஆண் துணையில்லாத தனக்கு தன் மகள் ஒருத்தியே துணை என்று இருந்து பழகி விட்டதால் அவளைக் காணாது அவள் தடுமாறினாள். அவளுடைய தோழிகளின் அலைபேசிகளுக்கு அழைத்தும் பார்த்தாள். எல்லோருமே அவள் இன்று 5 மணிக்கே ஆபிஸ் விட்டுப் போய்விட்டாளே. இன்னும் வரவில்லையா என அவளையே திருப்பிக் கேட்டனர்.

அவளுடைய உயிர்த் தோழி வினிதாவை அலைபேசியில் அவள் அழைத்த போது அது சுவிட்ச் ஆப் மோடில் இருப்பதாக அலைபேசி சொன்னது. என்ன செய்வது என்று அவள் தவித்துக் கொண்டிருந்த போது அவளுடைய மாடி போர்ஷனில் குடி யிருக்கும் குடும்பத்தினர் வெளியே போவதற்கு கீழே இறங்கி வந்தனர். இவள் சோர்ந்த முகத்துடன் இருப் பதைப் பார்த்து என்ன ஏது என்று இவளை விசாரித்தனர்.

மகள் வருவதற்கு லேட்டாகி விட்டதே எனக் காத்திருப்பதாகச் சொன்ன ராஜம்மாள், அவளைக் காண வில்லை என அவர்களிடம் சொல்லத் தயங்கினாள். அவர்கள் ஏதோ அவசரத்தில் இருந்தவர்கள் காரில் ஏறிப் புறப்பட்டுப் போய் விட்டனர்.

இப்போது அந்தத் தெருவிலி ருந்த வீட்டு விளக்குகள் கூட அணைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. மணி பத்தை நெருங்கிக் கொண்டி ருந்தது. வெளியில் நிற்பதற்கும்கூட பயமாயிருந்தது ராஜம்மாளுக்கு, ஆனா லும் தன் மகள் இதுவரை வரவில்லை என்கிற உண்மை அவளைத் தாக்கி யதால் அவள் பயத்தைக் கூட உணராது தெரு விலேயே நின்று பரபரத்துக் கொண்டி ருந்தாள்.

சினிமாவுக்கோ அல்லது

வேறெங்காவது மால்களுக்கோ மகள் போயிருக்கலாமோ என்கிற சந்தேகமும் இருந்தது, ஏனெனில் நாளை சனிக்கிழமை என்பதும் அது விடுமுறை நாளென்பதும் அதை உறுதி செய்ததால் அவள் மணி பதினொன்றரை தாண்டியும் நின்று கொண்டு இருந்தாள் தெருவிலே.

12 மணியளவில் ரோந்துப் போலீசார் தெருவில் வந்து கொண்டிருந்த போது அந்தத் தெருவில் ஒரு வீட்டில் மட்டும் விளக்கெரிவதும், அந்த வீட்டின் முன்னாள் ஒரு வயதான பெண் நின்று கொண்டிருப்பதும் தெரிந்ததால் அங்கே விரைந்தனர் அவர்கள்.

என்னம்மா, நீங்கள் இந்த வீட்டு உரிமையாளர் தானே, ஏன் வெளியில் நிற்கிறீர்கள் 12 மணி வரை.

என் மகள் ஆபிஸ் விட்டு இன்னும் வரவில்லை, அவளை எதிர் பார்த்து தான் நான் நின்று கொண்டிருக்கிறேன். இவ்வளவு நேரமாகிவிட்டதே என்ற பயத்திலு மிருக்கிறேன்.

உங்கள் மகள் யாராவது அவருடைய பிரண்டு வீட்டிற்குச் சென்றிருக்கலாம்.

இல்லை ஐயா, அவள் எங்கு செல்வதாயிருந்தாலும் என்னிடம் தகவல் முன்பே சொல்லிவிட்டுத் தான் செல்வாள்.

சரி அம்மா நாங்கள் வழக்குப் பதிவு செய்து தேடுகிறோம். தகவல்கள் சொல்கிறீர்களா? என்றார் ஒரு போலீஸ்காரர்.

ஐயா, அதெல்லாம் வேண்டாம் எனப் பயந்தாள் அவள்.

மற்றொரு போலீஸ்காரர் முன்வந்து சொன்னார், அம்மா நீங்கள் உங்கள் மகளின் ஆபிஸ் முகவரியை மட்டும் சொல்லுங்கள். எனக்கு நாளைக்கு டூட்டி இல்லை, ஆப் தான். நான் அந்த ஆபிசிற்கு அக்கம்பக்கம் உங்கள் மகள் பெயர் சொல்லாமல் விசாரித்து உங்களுக்கு நாளைக்கு செய்தி சொல்கிறேன். அதுவரை வழக்கும் எழுதாதிருக்கிறோம். நீங்கள் அமைதியாய் தூங்குங்கள். நாளை காலை பத்து மணிக்கு உங்களைக் கூப்பிட்டு நான் பேசுகிறேன். என்றார்.

அவர் சொல்வதில் அர்த்தம் இருந்த தால் ராஜம்மாவும் சரியென்று தலை யாட்டினாள். அவர்கள் கேட்ட தகவலையும் அந்தப் போலீஸ் காரரிடம் தந்தாள். அவர்கள் அவள் வீட்டினுள் சென்று கதவைத் தாழிடும் வரை காத்திருந்த பிறகே அங்கிருந்து அகன்றனர்.

எப்படி உறங்கினாள் எனத் தெரியவில்லை, ராஜம்மாள் எழுந்த போது மணி 7ஐ நெருங்கியிருந்தது. காலை வீட்டுப் பணிகளை அவசர அவசரமாக முடித்துக் கொண்டிருந்தாள் அவள். 9 மணியிருக்கும் போது அந்தப் போலீஸ்காரர் மப்டியில் தன் வீடு நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். வேகவேகமாக அவரருகே ஓடி வந்தாள்.

அம்மா, நான் இன்று காலை 8 மணிக்கே உங்கள் பெண்ணைப் பற்றி அவர்களுடைய ஆபிசிற்கு அருகாமையிலுள்ள கடைக்காரர்கள் மற்றுமுள்ளவர்களிடம் விசாரித்தேன். அவர்கள் யாரோ ஒரு அழகான இளைஞனோடு உங்கள் பெண் போய்க் கொண்டிருப்பதைப் பார்த் தார்களாம்.

யாராவதுபிரண்டாயிருக்குமோ அல்லது உறவினராயிருக்குமோ? சொல்லுங்கள் அம்மா, நான் மேற் கொண்டு விசாரிக்கிறேன் என்றார் அவர்.

ராஜம்மாளுக்கு தன் மகள் பற்றி அவள் தோழி அஞ்சனா சொன்ன தகவல் தான் ஞாபகத்திற்கு வந்தது. அம்மா, தான்யா, விதார்த் என்கிற இளைஞனைக் காதலிக்கிறாளம்மா, அவரும் எங்கள் ஆபிசில் பணிபுரியும் ஒரு பொறியாளர் தானம்மா. நான் தான்யாவிடம் சொன்னேன், காதல் எல்லாம் வேண்டாமடி, நீ அம்மாவிடம் சொல்லு, நானும் சொல்கிறேன். திருமணமே முடித்துக் கொள்ளுங்களடி என்றேன். அதற்கு அவள் என் அம்மாவுக்கு காதல் பிடிக்காதடி, அதனால் தான் என்றவள் இன்னும் ஒரு பயங்கரத்தையும் என்னிடம் சொன்னாள். நானும் விதார்த்தும் ஒரு சூழலில் தவறு செய்துவிட்டோமடி. இதையெல்லாம் அம்மா தாங்கமாட்டார்கள். நான் எங்காவது கண் மறைவாய் சென்று விடப் போகிறேன் என்று சொல்கிறாளம்மா. நான் தான் அவளை சமாதானப்படுத்தி காக்க வைத்திருக்கிறேன். நாம் அவர்களின் திருமணத்தை முடித்து விடலாம் அம்மா என என்னிடம் சொன்னாள். ராஜம்மாளுக்கு மின்சாரத்தைத் தொட்டது போலானது. அஞ்சனா இப்போது நீங்கள் அவளிடம் எதுவும் கேட்காதீர்கள். நான் பார்த்துக் கொள் கிறேன் என்றாள். ஆனால் அவள் ஏன் நேற்று போனை ஸ்விட்ச் ஆப்பில் வைத்திருந்தாள் என்பது மட்டும் தான் எனக்குப் புரியவில்லை. பாவம் அவளுக்கு என்ன பிரச்சினையோ என இதையெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தவளை போலீஸ்காரரின் குரல் விழிப்படையச் செய்தது.

என்னம்மா, நான் கேட்டதற்கு பதில் சொல்லாமல் பிரமை பிடித்த வர்கள் போலிருக்கிறீர்கள்.? என்னா யிற்று என்றார் அவர்.

நீங்கள் நல்லவர் போலிருக்கி றீர்கள், அதனால் சொல்கிறேன்., என் பெண் ஒரு பையனிடம் தன்னை இழந்து விட்டாளாம், அவனும் அவளும் காதலிக்கிறார்களாம், என்னிடம் சொன் னால் நான் தடுத்து விடுவேன் என்று சொல்லாமலிருக்கிறாளாம் என்று அவள் தோழி என்மேல் மிக அன்பு கொண்டவள் சொன்னாளய்யா, அதைத்தான் நினைத் தேன். பாவம் நீங்கள் நைட் டூட்டி பார்த்து விட்டு இதற்காக மெனக் கெடுகிறீர்களே என்றாள்.

இல்லையம்மா, என் மனைவி நேற்று மாலை தான் அவளுடைய ஊருக்குப் புறப்பட்டுச் சென்றாள். ஏன் அவ்வளவு அவசரமாகப் புறப் பட்டாள் என்றுகூட என்னிடம் சொல்ல அவளால் இயலாமல் போய் விட்டது. நான் நைட் டூட்டிக்கு முன்பே புறப்பட்டு வந்து விட்டேன் அல்லவா. அதனாலாயிருக்கும். இருந்தாலும் அவள் என்னிடம் சொல்லாமல் இப்படி திடுதிப்பென்று சென்றதில்லையம்மா. அது கூட எனக்குக் கவலையாய்த் தானிருக்கிறது. உங்கள் கவலைக்கு முன் அது அவ்வளவு பெரிய கவலை இல்லையென்று தான் நினைக்கிறேன். கொஞ்ச நேரம் முன்பு தான் அவள் எனக்குப் போன் செய்து இன்னும் இரண்டு மணி நேரத்தில் நான் அங்கு வந்து விடுவேன். காலை டிபன் மட்டும் ஓட்டலில் சாப்பிட்டுக் கொள்ளுங்கள். மதிய உணவை நான் வந்து தயார் செய்திடுவேன். கவலைப்படாதீர்கள் என்று சொன்னதோடு போனை வைத்து விட்டாளம்மா. அதனால்

நான் இப்போது ப்ரியாக இருப்ப தால் எனக்கொன்றும் இது கஷ்டமில்லை யம்மா

அவளுடைய நினைவுகளின் ஓட்டத்தில் ஏன் இந்த அஞ்சனாவின் போன் ஸ்விட்ச் ஆப்பில் இருக்கிறது. அவளிடம் இதுபற்றி கேட்க முடிய வில்லையே என்றவளின் நினைவு தற்காலத்திற்கு வந்தது, எதிரே நிற்கும் போலீஸ்காரர் என்ன நினைப்பார் எனச் சட்டென்று ஏதாவது கேட்க வேண்டுமே என்று,

உங்களுக்கு பிள்ளைக ளில்லையா சார் என்றாள் ராஜம்மாள் அவருடைய பேச்சை திசை திருப்ப

இருக்கிறான் ஒரு பிள்ளை. இருக்கிறான். உங்கள் மகள் பணி புரியும் ஆபிசில் தான் அவனும் பணி புரிகிறான். அவனும் நான் அம்மாவின் ஊருக்குப் போகிறேன் என்று அவன் ஆபிசிலிருந்து அப்படியே கிளம்பிப் போய்விட்டான். ஏனம்மா கேட்கிறீர்கள்.

இல்லை சும்மா தான் கேட்டேன். என்றாள் வருத்தத்துடன்.

கவலைப் படாதீர்கள் அம்மா. எந்தஉயிரும்அதுபிறக்கும்வயிற்றுக்கு பயன்படுவதில்லையம்மா, முத்து சிப்பிக்குள் இருந்து தான் வருகிறது. அந்த சிப்பிக்கு அதனால் பயனுண்டா, அது மற்றவர்களுக்குத் தானே பயனா கிறது, வீணையிலிருந்து பிறக்கும் நாதம் கேட்பவர்களுக்குத் தானே இன்பமாயிருக்கிறது. அந்த வீணைக்கு வலி தானே அம்மா, பெற்றோர்களை அண்டியிருக்கும் பிள்ளைகள் திருமணம் முடித்தவுடன் தனியாகத் தானே செல்கிறார்கள். அவர்களுக்கென்று ஒரு குடும்பம், குழந்தைகள் என்று. இப்படி நிறையச் சொல்லலாம் அம்மா, நான் நிறைய புத்தகங்கள் படிப்பேன் அதனால் இதைச் சொன்னேன். அதனால் நாம் பாசமாயில்லாமலிருக்க முடியாது தான். நம் மனம் வலிக்கும் தான். வலிகள் பொறுத்துத் தானாக வேண்டும். உங்கள் மகள் உங்களைப் போல் நல்லவராய்த் தானிருக்க வேண்டும். அவர்கள் தேர்ந்தெடுத்த காதலும் நல்லதாய்த் தானிருக்கும். கவலைப் படாதீர்கள். நான் உங்களுக்கு விரைவில் அவர்களைக் கண்டு பிடித்து உங்களிடம் கொண்டு வருகிறேன். என்னை நம்புங்கள் அம்மா என்றார் அந்த நல்ல போலீஸ்காரர். .

அப்போது அந்தத் தெருவில் கார் ஒன்று வந்து கொண்டிருப்பது இந்த இருவரின் காட்சிக்கும் வந்தது. அது சரியாக ராஜம்மாளின் வீட்டை அடைந்ததும் நின்றது.

கதவு திறந்ததும் அதிலிருந்து மண மாலை அணிந்த தான்யாவும் விதார்த்தும் இறங்கினர், கூடவே இறங்கிய அந்த நடுத்தர வயதுப் பெண்ணைப் பார்த்த போலீஸ்காரர் நீயா ரங்கம் என்று கத்தினார். என்ன இதெல்லாம்? என்று சத்தமிட்டார்.

விதார்த் தன் காதலைச் சொன்ன போது நீங்கள் காதல் கீதல் எல்லாம் வேண்டாம் என்று கத்தினீர்கள். அதனால் தான். நானே அவர்களுக்கு மணமுடித்து வைத்தேன்.

அதே நேரத்தில் அஞ்சனா தூரத்தில் வருவது தெரிந்தது. அவளும் இங்கு நடைபெறும் காட்சிகளைப் பார்த்துக் கொண்டே வருவதும் தெரிந்தது. ராஜம்மாளின் அருகில் வந்தவள், அம்மா எனது வீட்டில் எனக்கு நிச்சயதார்த்தத்தை நேற்றே நடத்த திடீரென்று முடிவு செய்தனர்

என் பெற்றோர். எனக்கென்று நிர்ணயிக்கப்பட்ட எனது அத்தை மகன்கூட அவர் நேற்றே பணி நிமித்தமாக மும்பை செல்ல வேண்டி யிருந்ததால் அருகி லுள்ள உறவினர்களை நேரமில்லாமல் அழைத்து நிச்சயதார்த்தம் நடந்தது. யாருக்கும் சொல்லாமல் திருட்டு நிச்சயதார்த்தம் போல் நடந்ததால் நானும் உங்களுக்குச் சொல்ல முடியாத நிலை. எனது போனைக்கூட நான் ஸ்விட்ச் ஆப்பில் வைத்து விட்டேன். அதுதான் இப்போது ஓடி வருகிறேன்.. எல்லாம் சுபமாக முடிந்து விட்டது போலிருக்கிறதே. என்றவள் அனாமிகாவிடம் ஓடி அவளைத் தழுவிக் கொண்டாள்.

இப்போது எல்லாம் புரிந்தது ராஜம்மாளுக்கு, அவளுக்கு ஒரு புறம் மகிழ்ச்சி என்றாலும் இன்னொரு புறம் அதிர்ச்சியுமிருந்தது. திருடனுக்குத் தேள் கொட்டியது போல் விழித்துக் கொண்டிருந்தார் போலீஸ்காரர். பாவம். அவர் என்ன செய்வார்.?

---

# பெண்மையைப் போற்றுவோம்

**நிலு டீன்**
பண்டாரவளை

மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை யின் கூற்றுக்கிணங்க பெண்ணாய் பிறந்ததில் பெருமை கொண்டு போற்றவும் புகழவும் தக்க உயரிய படைப்பாய் உள்ள மாதர்களில் பாரதி கண்ட புதுமைப் பெண்களும் பாதைகள் உணராத பாமர பெண்களும் இன்ற ளவிலும் உலவும் உலகினில் மகளிர் தினத்திற்காய் ஒரு சிறு தூறல்.

மண்ணாளும் மாண்புமிகு ஞானமும் விண் நீளும் உயர்த்தகு வீரமும் பெண்களில் யாரும் திணிப் பவை அன்று அதை அவள் உணர்ந்த மாத்திரத்திலேயே அனைத்து விதமான பேராற்றலும் அவளிடம் பிறப்பெடுக் கின்றன மண் குடிசைகள் மாளிகைகள் ஆவதும் மன்னர் குடைகள் மண்ணில் வீழ்வதும் பெண் நினைத்தால் இயலாத காரியம் அன்று. அவற்றை சரித்திரம் கண்ட வரலாறுகளே நமக்குக் கூறும் அதனால் தான் ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே என்று பாடல் களும் படைத்தனர் போலும்.

அன்பில் அன்னையாய் அக்கறை காட்டுவதில் சகோதரியாய் தோள் கொடுப்பதில் தோழியாய் மனை நிரப்பும் நல்ல மனையாளாய் மனதை மகிழ்விக்கும் மகளாய் என ஆணின் ஒவ்வொரு பரிணாமத்திலும் பருவங்களாகவும் உருவங்களாகவும் உணர்வுடன் ஊடுருவி உறுதுணை யாக வாழ்க்கையை விட்டு விலக்கவும் முடியாத வார்த்தைகளால் விளக்கவும் இயலாத உயிரோவியம் பெண்கள்.

பிறக்கையிலேயே சிறப்பு பெற்று வந்தோம் என்பது எத்தகைய உண்மையோ அது போலவே பொறுப்

பும் பெற்று வந்தோம் என்பதும் உண்மையே சோதனைகள் கடந்து சாதனைகளுடன் சரித்திரம் படைக்க கருவாகும் போதே மங்கையராய் பிறந்து கருவினில் மகவை சுமந்து சிறு பராயம் தொட்டு சிகை நரைக்கும் வரையிலும் சுமை தாங்கிகள் ஆகவே வாழ வேண்டி உள்ளது அதை சுகமாய் அவள் ஏற்க ஆணின் அரவணைப்பும் அக்கறையும் இன்றி அமையாதது. பெண்களை வீட்டில் மதிக்கத் தொடங்குவோம் அப்போதுதான் நாட்டிலும் மதிக்கப் படுவார்கள்.

பள்ளி நாட்களில் மொட்டு விட்ட அரும்பாய் துள்ளித்திரியும் வயதிலேயே பாதுகாப்பின்மையை உணரும் மோசமான பார்வை களையும் தீயான தீண்டல் களையும் கடந்து வரவேண்டி உள்ளது பாலர் வயதி லேயே பாலியல் கொடுமைகள் பல கண்ட வரலாறுகள் பக்கம் பக்கமாக இன்றளவிலும் நீண்டு கொண்டேதான் இருக்கின்றன.

கொண்டவன் சுமை தீர என குடும்ப சுமை தாங்க என பணி நாடி சென்றால் பேருந்து பயணம் தொடங்கி பணியிடம் பொது இடம் என பல இம்சைகளும் இச்சைகளும் இடைவிடாது தொடரும் அவல நிலை இன்றும் ஓய்ந்த பாடில்லை.

அனைத்திலும் அடிபட்டாலும் அவளை அரவணைக்கும் பொறுப்பு தந்தையாய் தமையனாய் தலைவனாய் தோழனாய் ஒரு ஆடவனுக்கு உண்டு உங்கள் பிறப்பிற்கே காரணமாகவும் வளர்ச்சியில் ஊன்றுகோலாகவும் இருக்கும் எங்களை பாதுகாப்பாய் உணரச் செய்யவதுடன் பணி இடத்திலும் பொது இடத்திலும் எங்க ளுக்கான அங்கீகாரத்தை வழங்கு வதோடு அசௌகரியங்கள் நிகழாமல் பார்த்து கொள்வதும் உங்களுக்கான கடமைகள். பெண்களை உடல் ரீதியாக மாத்திரம் நோக்காது உடல் கடந்து உள ரீதியில் உணர்வு கொண்ட ஒரு உயிராய் நடத்துங்கள்.

பெண்களுக்கு எதிரான அனைத்து வன்கொடுமைகளையும் வேரறுக்கும் நோக்குடன் பெண் உரிமை கள் மற்றும் பெண்கள் பாதுகாப்பை முன்னிலைப்படுத்தி கொண்டாடப்படு வது தான் உலக மகளிர் தினமாகும். உலக வரலாற்றையே திருப்பிப் போட்டு உலகையே திரும்பிப் பார்க்கவைத்த பெண்மணிகள் எத்தனையோ பேர். அத்தனை பெண்களையும் அவர்கள் செய்த தியாகங்களையும் சாதனை களையும் ஒரு கணமாவது சிந்தித்துப் பார்க்கவேண்டியது ஒரு சமுதாயத்தின் தார்மீக கடமையாகும். பெண்மையைப் போற்றுவோம்.

---

# புன்னகை செய்

புன்னகை எனும்
புத்தாடையை
நித்தமும் நீ அணிந்தால்!

அந்த பொன் நகைகளும்
தோற்குமடி பெண்ணே...

உன் உள்ள அழகும்
கால் முளைத்து
ஆடுமடி கண்ணே!

இதயம் திறந்து
இதழ் பிரிக்க பயிற்சி செய்

உன் முயற்சிகள் எல்லாம்
உன்னை முன்னேற்றப்
பாதைக்கு அழைத்து சென்று
ஆசீர்வதிக்கும்

**அப்துல் நாசர்**
மலேசியா

# தடைகள் வாழ்வின் வெற்றிப் படிகளே

## நேசமுடன் ஈசு

«மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து».

என்று தெய்வப்புலவர் திருவள்ளுவர் வாக்கிற்கேற்ப,

தடைகள் நம் திறமைக்கான வழிகள் நமது வெற்றிக்கு தடைகளே திறவுகோலாக இருந்து வெற்றி எனும் வைரங்களை நமக்கு பரிசளிக்கிறது. சாக்கடை தேங்குகிறது ஆறு நதி போன்றவை ஓடுகின்றன. தடைகளை தாண்டி செல்லா நீர் சாக்கடையாகிறது. தடைசெய்யும் கற்கள் பாறைகள் மரங்கள் கிளைகள் குப்பைகள் எனும் தடைகளை தாண்டும் நதியின் நெளிவுகளும் சுழிவுகளும் அழகு. அந்த தடைகளாலேயே நதியின் அழகு மேலும் மெருகேறி வெளிப்படும். தெளிந்த நீரோடை ஒருவித அழகு என்றாலும் தடைகளோடு செல்கின்ற நதிகளும் ஆறுகளும் பேரழகு பெறுகின்றது. நீங்கள் நீர்வீழ்ச்சியில் என்ன காண்கிறீர்கள்? அங்கே தொடர்ந்து வந்து கொண்டு இருந்த நீரை தடைசெய்த ஏதேனும் ஒரு பாறையிலிருந்து தாவி குதிப்பதே அருவியாகிறது. கடலில் அலைகள் இல்லை என்றால் ஏது அழகு? நாள் முழுவதும் கடல் அலைகளை ரசித்தாலும் சலிப்பதில்லை. அலைகள் இருந்தால் அது அழகினும் அழகு தான். காற்றெனும் தடைகள் தந்த அழகே அலைகளாகும். ஒரு கூட்டு புழுவானது அதன் கூட்டை விட்டு வெளியே வர தயாராகிக்கொண்டிருக்கிறது இன்னும் சில மணித்துளிகளில் அது தன் அழகிய சிறகுகளை விரித்து வானத்தை வசப்படுத்த கூடும். அந்த சமயத்தில் அதை காணுகின்ற ஒரு மாணவன் எண்ணுகிறான் இந்த வண்ணத்துப் பூச்சி கூடெனும் தடைகளால் மிகவும் சிரமப் படுகிறது அதற்கு உதவ வேண்டும் என்று .அந்த கூட்டை சற்று கிழித்து அந்த வண்ணத்துப்பூச்சி வெளிவர உதவுகிறான். வண்ணத்துப்பூச்சிக்கான தடைகளை அந்த மாணவன் தகர்த்து விட்டான் ஆனால் நிகழ்ந்தது என்ன? அந்த வண்ணத்துப்பூச்சி கூட்டுப் புழுவிலிருந்து அந்த தடைகளை தானாக தகர்த்து எறிய முயற்சிக்கும் போதுதான் அதன் இறக்கைகள் வலு பெற்றதாக மாறும். ஆனால் மாணவன் உதவியென்ற பெயரில் அந்த தடைகளை உடைத்ததால் வண்ணத்துப்பூச்சிக்கு வலி யும் இல்லாமல் போனது வாழ வழியும் இல்லாமல் போனது. அந்த மாணவன் அந்த தடைகளை தகர்த்ததினால் அந்த வண்ணத்துப்பூச்சியின் சிறகு களில் பலமில்லாமல் அது சற்று நேரத்திற்கெல்லாம் தன் சிறகுகளை விரித்துப் பறக்க கூட இயலாமல் பரிதவித்து இறந்துபோனது. தடைகள் தான் வெற்றியின் படிகள் ஆகும். இந்த இடத்தில் பெற்றோர்களுக்கான ஒரு முக்கியமான விடயம் நினைவு கூறத்தக்கது அது என்னவெனில்

மாணவர்கள் என்பவர்கள் விதைகளை போன்றவர்கள் அவர்களை மண்ணில் விதைக்கும் போது அந்த விதைகள் தானாக மண்ணை முட்டி தள்ளிக் கொண்டு விண்ணை நோக்கி வளரும் அதற்கு நீங்கள் வழி விடுங்கள் போதும் ஆனால் முழுமையையும் முழு தடைகளையும் நீங்கள் விலக்கும் போது அதுவே அவர்களுக்கு வண்ணத்துப் பூச்சியின் நிலையை ஏற்படுத்தி விடுகிறது.

முள் தைத்ததால் தான் நம் கால்களுக்கு செருப்பு வந்தது. வெயில் மழை எனும் தடைகளே ஆதிமனிதனுக்கு இலை தழைகளால் உடையானது. அதனை கட்டிக்கொண்டு மானம் காத்த மனிதனுக்கு வாழ அடுத்த தடைகளாக மிருகங்கள் இருந்தன. அதற்காகத்தான் அவன் ஆயுதங்கள் என்கின்ற ஒரு அற்புதத்தை கண்டு பிடித்தான். நெருப் பென்பது என்னவென்று அறியாத காலகட்டத்தில் அது ஆதிமனிதர்களுக்கு ஒருவித பயத்தை பீதியை உண்டாக்கியது தடையாக இருந்த நெருப்பெனும் சோதனை யை தகர்த்தே சாதனைகளை கண்டு பிடித்தான். ஆதிமனிதனுக்கு வாழ்க்கையில் ஏற்பட்ட தடைகளாக இருந்தவைகளையே தனது வெற்றிக்கு படிக்கற்களாக மாற்றி கொண்டான. தன்மீது ஏறி தன்னை கொல்ல மலைமீதிருந்து உருண்டு வந்த பாறைகளிலிருந்து சக்கரத்தை கண்டறிந்துவாகனங்களாக மாற்றி அதில் ஏறி தடையாக இருந்த கற்களையே உயர பறக்கும் விற்களாக மாற்றினான். தான் மிரண்டு பயப்படுவதற்கு காரணமாக இருந்த நெருப்பெனும் தடையை சிந்தனையால் சிக்கிமுக்கி கற்களாக தன் உள்ளங்கையில் வைக்க முடிந்தது. பிறகு அதுவே அவனுக்கு யாகம் செய்வதற்கு யோகம் செய்வதாக அமைந்தது

தன்னை சோதனையாக கொல்ல உருண்டு வந்த கற்களெனும் தடைகளுக்குள்ளிருந்து மனித வளர்ச்சிக்கு சாதனை யாக மாற்றும் சக்கரங்களைக் கண்டு பிடித்தான். மகாத்மா காந்தி கூட தன் இளம் வயதில் பெண்களை கண்டு மயங்கிய தடைகளே பின் அவர் பெற்ற தெளிவுக்கு காரணமாகி சாதாரண ஆத்மாவானவரை மகாத் மாவாக மாற்றியது. வறுமைப் பிடியில் காமராஜருக்கு ஏற்பட்ட தடைகளே தமிழகத்தில் கல்விக்கும்

# தவறிப்போனது

உலகமெல்லாம் கொண்டாடும்
உன்னத காதலர் தினத்தில்
தலையாய தினமொன்று
தவறிப் போனது

முத்தங்களை பரிமாறும்
சத்தான தினத்தில் முலைப்பாலூட்டும்
முக்கிய தினமொன்று
மூழ்கிப் போனது

கட்டியணைத்து
காமம் பரிமாற
காத்திருக்கும் தினத்தில்
கண்களாக இருக்குமொரு
காவிய தினம்
காணாமல் போனது

உற்சாகத்தையும்
உல்லாசத்தையும்
உயர்த்திப் பிடிக்குமொரு
உலக காதலர் தினத்தில்

ஒரு செல் அமீபா முதல்
உருவாக்கும் குழந்தை வரை
தடம் பதிக்குமொரு
தாய்மை தினம்
இடம் மறந்து போனது

உடலில் இறுதி
குருதி ஓடும் வரை
உயிரில் கலந்து நினைத்திருப்போம்
தம்மை உருவாக்கிய
தாய்மை தினத்தை...

**- நேசமுடன் ஈசு**

விவசாயத்திற்கும் கண்களைத் திறந்தது. சாதிமத தீயின் அனலே ஈவேரா பெரியாரை உருவாக்கியது. அடுத்தடுத்த அவமான தடைகளே ஒடுக்கப்பட்ட அம்பேத்காரை நாட்டுக் கும் அடித்தட்டு மக்களுக்கும் சட்டம் கிடைக்க செய்தது. அதேபோலதான் மாணவர்களுக்கும் மற்றவர்களுக்கும் தடைகள் ஏற்படும் போதெல்லாம் அந்த தடைகளே உங்களுக்கு வெற்றிக் கான வழிகளை திறக்க இருக்கிறது என்பதை உணருங்கள். தடைகள் ஏற்படும் போதெல்லாம் தான் நம் அறிவு ஒரு ஆக்கபூர்வமான பார்வையை தேடுகிறது. மாணவர் களுக்கு செல்போன்கள் தவறான பழக்க வழக்கங்கள்தீய வழிகள் ஆகியவை தடைகளை உருவாக்கு கிறது. அதே சமயம் அந்த தடைகளை அவர்கள் உடைக்கும் பொழுது உள்ளே உயர்வுக்கான வழி கிடைக்கிறது.

இன்றைய சினிமா உலகத்தில் சொல்லிக் கொடுக்கும் ஒரு நல்ல விடயம் என்னவன்றால் எந்த திரைப் படம் என்றாலும் அதில் கதாநாயக னுக்கு தடைகள் வருகிறது. அந்த நாயகன் பொங்கி யெழுந்து அந்தத் தடைகளை உடைத் தெறிந்து வெற்றிக்கான சிகரத்தை எட்டுவது இன்றைய தமிழ் சினிமாவின் சூத்திரமாகஉள்ளது.எப்போதெல்லாம் நோய்கள், ஆபத்துக்கள், இயற்கை சீற்றங்கள் எனும் தடைகள் எழுகிறதோ அப்போ தெல்லாம் மருந்துகள், கண்டு பிடிப்புகள், மனிதநேயங்கள், தோன்றுகின்றன, இதற்கு வெள்ளம் சுனாமி நிவாரண உதவிகள் கஜா புயல் நிவாரண உதவிகள் தற்போதும் கொரோனா விழிப்புணர்வு கொரோனா நலத்திட்ட உதவிகள் மருத்துவ முகாம்கள் என பலவற்றை உதாரணமாக கூறலாம். தடைகள் என்பது சுருங்கக் கூறினால் அது ஒரு அழகிய பலாப்பழத்தை போன்றது அதில் மேல் உள்ள முட்களை கண்டு பயந்து தயங்கி ஒதுங்கிச் சென்று விட்டால் அவர்கள் வாழ்க்கையின் வெற்றிப்பலாச்சுளைகளை சுவைக்காமல் சென்றுவிடுவார்கள். எவரெல்லாம் அந்தத் தடைகளை கடந்து தன்னம்பிக்கையால், விடா முயற்சியால் அவற்றை உடைத்து வருகிறார்களோ அவர்களுக்கு வெற்றிப் பாதையின் கதவுகள் திறந்து சிவப்பு கம்பளம் விரித்து சாதனைபூக்களோடு காத்திருக் கின்றன உங்களை வரவேற்க.

# அதிர்வு

காலை விழித்தெழுந்தேன்
விடியலின் வாசம்
உடம்பெங்கும் மணத்தது
கால்களுக்குப் பதிலாக
மனதால் நடக்கிறேன்
புற்களுக்கு வலிக்குமென
பனிப்பூக்களின் உள்ளம்
தேடியலைகிறேன்
சிரித்து வரவேற்றதில் ஒருசிலிர்ப்பு
ஓடும் நதியில் உதிரும் பூக்களின்
பேராண்மையை வியக்கிறேன்
யாவற்றையும்
நேசித்து நேசித்து
மாய்ந்து போகிறேன்
இடையில் ஐயோ
மணி மணி அலற
உடம்பெங்கும் வியர்த்து வீசுகிறது
பள்ளியின் வாசம்

பெண்ணியம் செல்வக்குமாரி

# அவளும் நாயும்

**சாஜித் வஹாப்**

நாவலப்பிட்டி

பச்சை விரிப்பைப் போர்த்தி யிருந்த அடர்ந்த காட்டுக்குள் தான் அந்தக் கொலுசுச் சத்தம் மெல்ல மெல்லக் கேட்ட வண்ணமிருந்தது. யாருமற்ற காட்டுக்குள் கொலுசுக்கு என்ன வேலை? கொலுசு தன்னவளின் காலில் தொங்கிக் கொண்டி ருப்பதால் அதற்கு இருப்புக் கொள்ள வில்லை. எப்போது அந்த மென் கால்களுக்கு அது கொழுவப் பட்டதோ, அப்போதிருந்தே அதற்கு தான் அனாதையல்ல என்ற எண்ணம் தோன்றிவிட்டது. திக் திக் பயமெல்லாம் எப்போதோ தூக்கி யெறியப் பட்டுவிட்டது.

அவளுக்கும் அவ்வாறான பய உணர்வு இருப்பதாய்த் தெரியவில்லை. அதற்கெல்லாம் காரணம் அவளுடன் காலாற நடந்து கொண்டிருந்த அந்தப் நாய் தான். பாவம் கொலுசு தன் கைங்கரியத்தினால் தான் அவள் வீரநடை போட்டுக் கொண்டிருக்கிறாள் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டது.

காலை நேரப் பனித்துளிகளை இலைகளிலிருந்து தொட்டு அதனை நாய்க்குத் தெளித்த படி அதனைச் சீண்டிக் கொண்டே நடந்து வந்தாள் அவள். அவளது சீண்டல்களால் நாய் அவளைச் சுற்றி துள்ளிக் குதித்து ஓடியது. பனிப் புகைகளுக்குள் புகுந்து குளிருக்கு வரைவிலக்கணமாய் இருந்த குளக்கரைக்கு வந்து முடிந்தது அவர்களது நடை.

அவளை எதிர்பார்த்திருந்த குளத்து நீர் அவளைக் கண்டவுடன் தன்



முழுப் பலத்தையும் செதுக்கி அவளது காலைத் தொட்டு விட்டு நாணத்தால் குன்றிக் குறுகி மீண்டும் குளத்துக்குள் ஓடி மறைந்து கொண்டது.

புதிதாகப் பிறந்திருந்த தாமரை மொட்டொன்றைத் தன் மென்மையான கரங்களால் வருடுகின்ற பேராசையில் மெல்ல குளத்துக்குள் இறங்கி அதனை நோக்கி ஒவ்வொரு எட்டாய் எடுத்து வைத்தாள். கொலுசு முழுமையாக குளிர் நீரில் மூழ்கியிருந்ததால் அதன் சத்தம் இல்லாமலேயே போயிருந்தது. எதையோ கண்ட மரண பீதியில் கொலுசு ரணகளம் ஆடிக் கொண்டிருப்பது அவளுக்குத் தெரியவில்லை. அவளது அவதானம் முழுவதும் அந்த இளம் தாமரையின் மீதே குவிந்திருந்தது.

திடீரென்று ஒரு சறுக்கல். நேற்று

பெய்திருந்த மழையில் ஏலவே குளத்து நீர் மட்டம் அதிகரித்துச் சேற்றுக் குழிகளின் அட்டகாசம் அதிகரித்திருந்தன. சேறின் இடுக்கில் தான் மெதுவாக இறங்கிக் கொண்டிருந்ததை அப்போதுதான் அவள் உணர்ந்து அலறத் துவங்கினாள். உடலின் அசைவு அதிகரிக்கின்ற வேகத்துக்கு ஏற்றாற் போல் அவளது உடல் நீருக்குள் மெது மெதுவாக மூழ்க ஆரம்பித்தது.

நாய் ஒரே பாய்ச்சலில் அவளை நோக்கி நீந்தி வந்து தன் முழுப்பலத்துடன் தன்னவளைக் காப்பாற்றப் போராடிக் கொண்டிருந்தது. நாயின் பதற்றமான குரைப்புத் தான் அவள் இறுதியாகக் கேட்ட சத்தம்.

மெதுவாய் கண் இமைகள் திறபட ஏதோவொரு புத்துணர்வுடன் எழுந்து அமர பக்கத்தில் நாய் அவளைப் ஏக்கத்துடன் பார்த்த வண்ணமிருந்தது. அதனை நன்றியுடன் அணைத்துக் கொண்டு எழுந்து நின்று சுற்றும் முற்றும் பார்த்தாள். பரிச்சயமற்ற இடம். முன்னால் தென்பட்ட வீதியில் நடக்க ஆரம்பித்தாள். அவளது காலில் கொலுசு இல்லை. அதனை அவதானிக்கின்ற நிலைமையில் அவள் இல்லை.

சிறிது தூரம் சென்றவுடன் மாபெரும் வெண்ணிறச் சுவரொன்றைக் கண்டாள். பார்ப்பதற்குப் பளிங்குச் சுவராய் இருந்தது. இல்லை பளிங்குச் சுவரே தான். சுவரோடு ஒட்டிச் சில தூரம் நடந்த போது அதன் பிரமாண்டமான வாயில் தென்பட்டது. அதனருகில் சென்றவுடன் அதன் வாயிற்காப்போன் வீற்றிருந்தான். அவ்வாறான ஒரு வாயில் காவலனை இது வரை அவள் கற்பனை கூடப் பண்ணியிருக்கவில்லை. கற்பனைக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.

“இது என்ன இடம்?” மென்மையான குரலில் கேட்டாள் அவள். “இது தான் சுவனம்” என்று பதில் வந்தது. உள்ளே செல்ல அனுமதி வழங்கப்பட குதூகலத்துடன் நாயை இறுக்கியணைத்த வண்ணம் நுழைய முற்பட திடீரென அனுமதி மறுக்கப்பட்டது. ஏனென்ற கேள்விக் குறியுடன் வாயில் காவலனை நோக்கினாள் அவள். “இங்கு செல்லப் பிராணிகளுக்கு இடமில்லை. நுழைவ தாயின் தாங்கள் மாத்திரம் நுழையலாம்” எனக் கூறப்பட ஒரு நிமிடம் ஆடிப் போனாள்.

என்ன நினைத்தாளோ தெரியவில்லை. விறு விறுவென திரும்பி வந்து தன் நாயோடு மீண்டும் வீதியில் நடக்க ஆரம்பித்தாள். எல்லாமே புதிய அனுபவமாக இருந்தது.

சிறிது தூரம் செல்ல பசுஞ் சோலையொன்று தென்பட உடனே அதனை நோக்கி நடையைத் துரிதப் படுத்தினாள். அருகில் சென்றவுடன் தான் அதற்கும் ஒரு வாயில் காப் போன் இருப்பதைக் கண்டாள். என்னடா நமக்கு வந்த சோதனை! என்ற எண்ணத்தில் “இது என்ன இடம்?” என்று வினவ “இது தான் சுவனம்” என்று பதிலளிக்கப்பட்டது.

ஆச்சரியத்தின் உச்சத்தில் “அப்போது அங்குள்ள பளிங்குச் சுவர் இடம் சுவனம் என்று சொல்லப்பட்டதே!” என்று மெதுவாக வினவினாள். ஒரு சிரிப்புடன் “அது நரகம்” என்று சொல்லப்பட்டது. திகைப்பு இரட்டிப்பானது.

“இங்கே எனது நாயை அழைத்துச் செல்லலாமா?” என்று பரிதாபமாய்க் கேட்க, “அதற்குத் தானே இந்தச் சுவனம் உமக்குப் பரிசளிக்கப் பட்டிருக்கிறது. இனி மரணமில்லா வாழ்க்கையை உங்கள் செல்லப் பிராணியுடன் கழியுங்கள்” என்று கூறப்பட்டது. துள்ளிக் குதித்த வண்ணம் சுவனத்தில் தன் நாயுடன் சங்கமித்தாள் அவள்.

# அடிமைத்தனம் அழிப்பாயா..?!

என்ன புண்ணியம் செய்தேன்..கனியமுதே..
ஓராயிரம் கனவுகள் வைத்தேனடி..
பால் நிலவே..
வளர் பிறையே..
பௌர்ணமி வெளிச்சமாய் வந்தவளே..

"மனசாட்சி இல்லாள் காண் இல்லாயின்
வாழ்க்கை எனை மாட்சித் தாயினும் இல் "
வள்ளுவன் வாக்கின்படி செல்வாயோ..

மேகங்களையும்.. குயில்களையும்..
இளமையையும் அழகையும் சேர்த்த..
"சங்கத்தமிழ் பாமாலை"..
சூடிக்கொடுத்த நாச்சியாரின்
பாவை நோன்பை நூர்ப்பாயோ..

"காலை எழுந்தவுடன் படிப்பு..
கனிவு தரும் நல்ல பாட்டு..
மாலையில் விளையாட்டு.. "
பாரதியின் வழக்கம் கொள்வாயோ..

"மூடநம்பிக்கைகளை நம்பி அலையும்
திருந்தாத கூட்டத்தை உய்விக்க வந்த உவப்பே!
பகுத்தறிவே!.. பாரதிதாசனின்
புரட்சிப் பெண்ணாவாயோ..



புதுக்கவிதையே.. இலக்கணங்கள்
உனக்கு இல்லையே..
பிரபஞ்ச சக்தியே..
தீதும் நன்றும் நிறைந்த உலகில்
அன்னமே.. பிரித்துணருக..

மரபணுவில் ஊறிய
அடிமைத்தனம் அழிப்பாயா..?!
வரம் வேண்டும் கொடுப்பாயா..கண்ணே!

**சாரதா சந்தோஷ்**
ஐதராபாத்

# THE ROYAL
MENU


#314D, Havelock Road, Col-05.
TP - 0112 50 60 90 / 0117 020 720

#85, Elvitigala Mawatha, Col-08.
TP - 0112 69 6009/0112 69 6007

#123, Deans Road, Col-10.
TP - 0112 056410 / 0112 056411

royalburger2014@gmail.com

@royalburger2014



**Royal burger**

**Submarine, burger, pasta,**
**Rice, hot dogs**
**Delivery hotline**

0112-50 60 90